மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 10 ★ 7-7-57 சென்னை ★ விலை 16 காசு

1200 கோடி அதிக செலவு

—(0)—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஆகும்

—(0)—

விலைவாசிகள் ஏற்றம் முக்கிய காரணம்

—(0)—

பண்டித நேரு என்ன செய்யப்போகிருர்?

—(0)—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எப்படியேனும் நிறைவேற்றியாகவேண்டும் என்ற பிடிவாதத்துடன், மத்திய அரசாங்கம் புது வரிகளைப் போட்டது. திட்டத்தின் பெயரைச் சொல்லி, ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் அதிகம் தரும் புதுவரிகள் போடப்பட்டுள்ளன. புதுவரிகளில் 100 கோடியில் 75 கோடிக்கு மேல் நேரடியாக ஏழை மக்களின்மீது சுமையை அதிகரிப்பதாக உள்ளது. இவ்வாறு ஏழைகளை இன்னும் ஏழைகளாக்கி, மத்திய அரசாங்கம் பணப்பெட்டி நிரப்பப்பட்டு அதனால் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும்.

வரிகள் உயர்த்தப்படுவதால், போட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதில்லை. திட்டத்திற்காக வரிகளை அதிகப்படுத்தினர்கள்; வரிகளை அதிகப்படுத்துவதால் திட்டத்தின் செலவு அதிகமாகும். திட்டச் செலவுக்காக வரிகள் போடப்போய் வரிக்கொடுமையால் திட்டச்செலவு உயர்ந்துவிடும் தன்மை இந்தியப் பொருளாதாரத்தில் உண்டாகி யிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டத்துக்காக வரிகள் உயருகின்றன; வரிகள் உயருவதால் விலைவாசிகள் உயருகின்றன; விலைகள் வளர்வதால் அன்றாட வாழ்க்கைச் செலவு அதிகமாகிறது; வாழ்க்கைச் செலவு உயர்வதால் கூலி அதிக மாகிறது; பொருள்களின் விலையும் உயர்ந்து வேலையை முடிக்கும் செலவும் உயர்ந்தால், திட்டங்களுக்கான செலவும் உயர்கிறது! ஆக போடப்பட்ட திட்டங்களை அப்படியே நிறைவேற்றப்படவேண்டுமென்றால், வரி உயர்வுக்குப்பின் அதிகப்பணம் தேவைப்படுகிறது! வரிப்பணம் எந்த அளவு அதிகமாக வசூலிக்கப்படுகிறதோ, அதைவிட அதிகமான அளவு திட்டத்தின் செலவு உயர்ந்துவிடும். இதனால் வரி போடப்பட்டது அர்த்தமற்றதாகிவிடும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு திட்டக் குழுவினர் கணக்கிட்ட முதலீடு 6200 கோடி ரூபாய் இதில் 4800கோடி ரூபாய் அரசாங்கத்தின் பங்காகவும் 1400 கோடி ரூபாய் தனிப்பட்ட துறைக்காகவும் நிர்ணயிக்கப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்த திட்டக் குழுவினர், அரசாங்கப் பங்கான 4800 கோடி ரூபாய்களுக்கு விரிவான திட்டங்களையும் விவரங்களையும் தந்தனர். ஆனால் 4800 கோடி ரூபாயில் போடப்பட்ட திட்டம் அந்த அளவில் நிற்கவில்லை. அவ்வப்பொழுது செய்யப்படும் மாற்றங்களின் காரணமாகவும், விலைகள் உயர்கின்ற காரணத்தாலும், திட்டச்செலவு வேகமாக வளர்ந்துள்ளது.

1956 மந்தியில் 4800 கோடியாக இருந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், 1957 மே வருவதற்குள் 5500 கோடியாக உயர்ந்தது. இப்பொழுது அது இன்னும் உயர்ந்தது 6000 கோடியாகப் போகலாமெனத் தெரிகிறது.

ஐரோப்பாவுக்குப் புறப்படும் முன் பண்டிதநேரு மற்ற மத்திய அரசாங்க மந்திரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளாராம். "பல உயர்வுகளின் காரணமாகவும் முக்கியமாக விலைவாசிகள் உயர்வாலும், இரண்டாவது திட்டத்திற்கு ஆகும் செலவு இதற்குள் 5500 கோடி ரூபாயாக அதிகரித்து விட்டது. இது மேலும் 6000கோடி ரூபாய் வரை உயரக்கூடுமாதலாலும், இவ்வளவு பெருஞ் செலவை நாடு தாங்கமுடியாது என்பது நன்ருகத் தெரிவதாலும், பல்வேறு மந்திரி இலாகாக்கள் திட்டங்களைத் தயாரிக்கும் பொழுது திட்டக் கமிஷனைக் கலந்து கொள்ளவேண்டும்."

ஆக பண்டித நேருவின் கூற்றுப்படியே, இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் அரசாங்கப்பங்கு மட்டும் 6000 கோடி ரூபாய் வரை உயர்ந்துவிட்டது.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

மிளகின் மதிப்பு

★

பண்டைக்காலத்தில் தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. மிளகையும் மற்றுமுள்ள வாசனைப் பொருள்களையும் தேடி பிறநாட்டார்கள் வந்தார்கள். பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து, மிளகை வாங்கிச் செலவார்கள். பண்டைக்கால ரோமிலும், யவனத்திலும். தமிழ் நாட்டு மிளகு பெரிதும் விரும்பி வாங்கப்பட்டது.

ஆப்பிரிக்கா கண்டத்தின் மத்தியில் இருப்பவர்கள் கூட தென்னுட்டு மிளகை வாங்கி வந்ததாகத் தெரிகிறது. இங்கிருந்து சென்ற மிளகை "சொர்க்க லோக மணி" என அவர்கள் சொல்வார்களாம்.

இடைக்காலத்திலும் மிளகு மிக முக்கியமான வியாபாரப் பொருளாக இருந்தது. இங்கிருந்து வாங்கிச் செல்லப்படும் மிளகு ஐரோப்பா கண்டத்தில் அதிக விலைபோனதாம். ஒரு சமயம், மிளகு எடைக்கு எடை தங்கத்திற்கு ஐரோப்பாவில் விற்கப்பட்டதாம். மிளகை வாங்கும் வியாபாரத்தில் பல நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு வந்தன. இந்தியாவுக்கு வந்த ஆங்கில வியாபாரக் கம்பெனிக்குக்கூட ஆரம்பகாலத்தில் மிளகும், ஆட்டு மயிர்க் கம்பளியும் தான் முக்கியமான வியாபாரப் பொருள் களாயிருந்தன.

மிளகில் வியாபாரம் செய்வதென்ருல், அந்தக் காலத்தில் பெரும் பணக்காரர்களால் தான் முடியுமாம் அந்த வியாபாரத்துக்கு முதல் அதிகம் தேவைப்பட்டது. அதேபோல் இலாபமும் ஏராளமாகக் கிடைத்தது பெரிய பணக்காரனைப்பற்றி பேசும் பொழுது "அவனுக்கென்ன பணத்தில் புரள்பவன்!" என்று சொல்வதைவிட, "அவனுக்கென்ன மிளகு மூட்டையில் சாய்ந்து கிடப்பவன்!" என்று சொல்வார்களாம். இங்கிலாந்தில் மிளகு வியாபாரம் செய்பவர்கள் விரைவில். முக்கியமான வியாபாரிகளானுர்கள். மிளகு வியாபாரம் மற்ற வியாபாரங்களுககு அடிப்படை வியாபாரமானது. கீழை நாடுகளுக்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டது மிளகு வியாபாரத்தைக் கைப்பற்றத் தான். மிளகின் வாசனை, போர்ச்சுகல் சுபெயின், டச்சு வியாபாரிகளை அலை கடல்களையும் தாண்டி அழைத்து வந்தது. மிளகு நாட்டைக் காண மேற்கு நோக்கிக் கொலம்பசு சென்ருன். கீழ்த்திசை நாடுகளிலிருந்த மிளகும், மற்ற வாசனைப் பொருள்களும் முதலில் வெளி நாட்டாரின் பொன்னை இங்கு கொண்டு வந்த போதிலும் பின், இந்த நாட்டு மண்ணை வெளிநாட்டார்களுக்கு அடிமைப்படுத்திவிட்டன.

கடன், வரி, வாடகை, வெகுமதி போன்றவைகளில் மிளகுகளை எண்ணித்தருவார்களாம். ஒரு சமயம்இத்தாலியில் வெற்றியடைந்த மன்னன் தன் படைத்தலைவர்களுக்கு ஒரு பிடி மிளகு பரிசாகக் கொடுத்தானும். மிக மதிப்புள்ள பரிசாக தமிழ்நாட்டு மிளகு அன்று கருதப்பட்டது.

அமெரிக்காவின் டாலர்களைச் சம்பாதிப்பதில் தென்னுட்டு மிளகு முக்கியமான பொருளாயிருக்கிறது.

அசாமில் கோபக்கனல்!

—o—

'ஏக இந்தியா' குளிர் நீரால் அதை அணைக்க முடியவில்லை

—(o)—

அசாம் எண்ணெய் அசாமியர் இரத்தம் எனப் பேசுகின்றனர்

—(o)—

பீகார் அசாமுக்கு வெளிநாடாகிறது

"அசாம் நாட்டில் இருக்கும் ஒவ்ந நுளி எண்ணெயும், அசாம் டில் இருக்கும் ஒவ்வொருவனுடைய லிலும் ஓடும் இரத்தத் துளிகளைப் ல, புனிதமானது, அதை மற்றவ உறிஞ்ச நாங்கள் அனுமதிக்க டோம். அதை நஞ்சுமயமாக்கிறு ஆக்குவோமோ தவிர, மற்றவர் உறிஞ்சுவதை நாங்கள் பார்த் ந்கப்போவதில்லை."

அசாம் மாநிலச் சட்டசபை இராம்நாத் சர்மா என்பவர் வாறு பேசியுள்ளார்.

அசாமில் அமைக்கப்படுவ இருந்த எண்ணெய் சுத் செய்யும் தொழிற்சாலையை, ர் மாநிலத்தில் ஏற்படுத் போவதாக செய்திகள் வந். அதற்கு எதிராக அசாமி ர் கோபாவேசத்துடன் ந்துள்ளனர். அசாம் மாநி முழுவதும் கொந்தளிப்பில் கிறது. மத்திய அரசாங் எடுத்துள்ள முடிவை ர்த்து அசாம் மாநிலம் கண் ர் கூட்டங்கள், கடை டைப்புகள், வேலை நிறுத்தங் , எல்லாவற்றையும் செய் து.

சாம் மாநிலத்தில் இருக் எண்ணெய் வெளிப்பகு ஏற்றுமதி செய்யப்பட்டு , எண்ணெய் சுத்தம் செய் சாலை ஏற்படுவதை அசாமி னால் அனுமதிக்க முடிய லை. அசாம் எண்ணெய் மியர்களுடைய உடலில் இரத்தத்தைப் போன்று கிறதாம். அதை வெளி எடுத்துப் போகப் பார்த் , அவர்களுடைய இரத் கொதிக்கிறது, எப்பாடு டேனும் அசாம் எண் ய் அசாம் நாட்டிலேயே தம் செய்யப்பட வேண்டு ா அவர்கள் முழங்குகின் ர்.

வெளியார் உறிஞ்சுவதை னுமதிக்கமாட்டோமென வர்கள் கூறுகிறார்களே, படிப்பட்ட "வெளியார்" து யார்? அமெரிக்கா டவரைக் குறிப்பிடுகிறார் ா, அல்லது இங்கிலாந் லோ, பிரான்சிலோ இருப்ப களைப்பற்றிப் பேசுகிறார்களா? கிடையாது. அடுத்துள்ள பீகார் மாநிலத்தில் இருப்பவர்களைப்பற்றி தான் அவர்கள் "வெளியார்" என்று குறிப்பிடுகிறார்கள். பீகாரும் இந்தியா என்கிற பாரதத்தில் ஒரு பகுதிதான். அசாமும் பீகாரும் "ஏக இந்தியாவுக்குள்" அடங்கியுள்ள பகுதிகள், அடங்கியுள்ள பகுதிகள் என்பதைவிட அடக்கப்பட்டுள்ள பகுதிகள் என்பது தெரிகிறது. தேசியம் பேசும்பொழுதும், பாரதப் பண்பாட்டைப் பற்றிப் பாடும்பொழுதும், ஏக இந்தியா கொள்கை பேசப்பட்டாலும், உரிமைகள் என்று வரும்பொழுது, அசாம்நாடு, அசாமியர், அசாம் எண்ணெய் என்ற எண்ணங்கள்தான் தலை தூக்கி நிற்கின்றன. எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலை, அசாமிலுள்ள கௌகாத்தியில் இருந்தாலென்ன பீகாரில் உள்ள பரானியில் இருந்தாலென்ன, மேற்கு வங்காளத்திலுள்ள கல்கத்தாவில் இருந்தாலென்ன, எல்லாம் இந்தியாவுக்குள்தான் இருக்கின்றன. இந்த மூன்று இடங்களிலும் எங்கு அமைக்கப்பட்டாலும் அது இந்தியாவின் தொழில் வளத்தைத்தான வளர்க்கப் போகிறது.

இந்தியாவின் தொழில்வளத்யல்ல, அசாமின் தொழில் வளத்தைப் பற்றிதான் அசாமியர்கள் பேசுகிறார்கள். அசாமியர்களுக்கு அசாம் நாடுதான் முதலில் நிற்கிறது. ஏக இந்தியா என்று உதட்டளவில் பேசப்பட்டபோதிலும், அசாமியரின் உள்ளத்தில் "அசாம் நாடு நமது நாடு" என்ற உணர்ச்சிதான் பொங்கிக் கொண்டிருக்கிறது. அசாம் நாட்டைத் தவிர இந்தியாவின் மற்ற பகுதிகள் வெளி நாடுகளாக, அசாமியர் தவிர்த்த மற்றவர்கள் வெளியார்களாகத்தான் காட்சியளிக்கின்றனர். பீகார் மாநிலத்திற்கு அசாம் நாட்டு எண்ணெய் போவது, வெளியார் தங்கள் நாட்டு வளத்தை "உறிஞ்சுவதாக" அவர்களுக்குப் படுகிறது. அசாம் நாட்டு வளம் அசாம் நாட்டுக்குப் பயன்படவில்லையென்றால், அது வேறு யாருக்கும் பயன்படக்கூடாது என்றும் துடிக்கின்றனர். அதை நச்சுமயமாக்குவோமே தவிர, வெளியார்—அசாம் நாட்டினரைத் தவிர்த்த வெளியார் பயன் படுத்துவதைப் பார்த்திருக்கப் போவதில்லையென இராம்நாத் சர்மா போன்றவர்கள் சட்டசபைகளில் தீப்பொறி பறக்கப் பேசுகின்றனர்.

அவ்வளவுக்கும் இராம்நாத் சர்மா, ஒருகாங்கிரசுக்காரர் தான்! காங்கிரசு சார்பாக நின்று தேர்தலில் வெற்றி பெற்று, காங்கிரசு எம் எல். ஏக்களில் ஒருவராக சட்டசபையில் வீற்றிருப்பவர்! இருந்தாலும், அசாம் நாடு, அசாம் நாட்டு வளர்ச்சி என்று வரும்பொழுது ஏக இந்தியா, பாரதம், எல்லாம் தவிடு பொடியாகின்றன.

எண்ணெய் பற்றிய பேச்சில், அசாம் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையாகக் காட்சியளிக்கிறது.

மத்திய அரசாங்கத்தின் போக்கைக் கண்டிக்கும் பொழுது, பேச்சில் கனல் தெரித்து விழுகிறது. "அசாம் சட்டசபையில் இவ்வளவு ஆவேசமான, கடுமையான பேச்சுகள் சமீப காலத்தில் பேசப்பட்டதே இல்லை!" என்று பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன. அவர்களின் கண்டனம் மத்திய அரசாங்கத்தை நோக்கி வீசப்படுகிறது.

அசாம் சட்டசபையில் பேசிய அரேசுவார் கோசுவாமி என்பவர் குறிப்பிட்டார்: "**மத்திய அரசாங்க மந்திரிகள் இங்கு வரும் பொழுதெல்லாம், அசாம் மக்களிடம் தேனொழுகப் பாசத்துடன் பேசினார்கள், ஆனால் அசாமை விட்டுப் போன தும் அசாம் பற்றிய நினைவு அவர்களுக்குப் போய்விடுகிறது. அசாம் நாட்டு இயற்கை யெழிலைப் பற்றிப் பேசவும், நம்மிடம் பாசம் கொண்டிருப்பதுபோல பாசாங்கு செய்து உதட்டளவில் பேசிவிட்டுப் போகவும், மத்தியமந்திரிகளை இனிமேல் அழைக்க வேண்டிய அவசியம் இருக்காதென்று நினைக்கிறேன்**"

மத்திய அரசாங்கத்துக்கு அசாம் மாநிலத்தில் அத்தகைய "நல்ல மதிப்பு" உண்டாகியிருக்கிறது.

எண்ணெய் சுத்தம் செய்யும் தொழிற்சாலை அசாமைவிட்டு வேறு பகுதியில்-வெளியிடத்தில் ஏற்பட்டால் அசாம் நாட்டில் பெரும் போராட்டம் துவங்குமெனத் தெரிகிறது, கட்சி மாறுபாடுகளைக் கருதாமல் அசாமியர்கள் உறுதியாக இருக்கின்றனர். அதற்காக போராட்ட அமைப்பை உண்டாக்கியுள்ளனர். 25,000 பேர்களுக்குமேல் போராட்டத்தில் கலந்துகொள்வார் எனத் தெரிகிறது. எண்ணெய்த் தொழிற்சாலை அசாம் மாநிலத்தைவிட்டு, வேறு மாநிலத்தில் அமைக்கப் படலாம் என்பது உறுதியானால் மந்திரி சபை இராஜினாமா செய்துவிடுமென பத்திரிக்கைச் செய்திகள் அறிவிக்கின்றன. மந்திரிசபை இந்தப் பிரச்சினையில் இராஜினாமா செய்யா விட்டால், அது மக்களின் நம்பிக்கையை இழந்து சட்டசபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் கவிழ்க்கப்படும் நிலை பிறக்கலாம். சட்டசபை உறுப்பினர்கள் அனைவருமே இந்தப்பிரச்சினையில் இராஜினாமா செய்துவிட வேண்டுமென்று உறுப்பினர்களில் பெருப்பாலோர் கருதுகின்றனர். பெரிய அரசியல் கொந்தளிப்பு குமுறிக் கொண்டிருக்கிறது.

அசாம்நாடு, அசாம் எண்ணெய் என்ற தணிப்பட்ட உரிமை எண்ணம் அசாமியர் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிகிறது. அதை "ஏக இந்தியா!" என்ற குளிர்நீரைக் கொட்டி அணைத்துவிடமுடியாது!

0

நார்வே மலைகள் அடர்ந்த நாடு. ஒவ்வொரு ஊருக்கும் இடையில் செங்குத்தான பாறைகளைக் கடக்கவேண்டியிருக்கும். அங்கு ஏணி வைக்கப்பட்டிருக்கும்.

வரி வசூலிப்பவர்கள் வரும்பொழுது, கிராமத்தார்களுக்குப் புதிய வரிகள் பிடிக்காவிட்டால், கிராமத்தைச் சுற்றியுள்ள ஏணிகளை எடுத்து விடுவார்களாம். வரி வசூலிப்பவனால் அந்தக் கிராமத்துக்கு வரமுடியாமல் போய்விடும்.

வர வர இந்தத் தொல்லை அதிகமாகி "ஏணிகளை எடுப்பது குற்றம்" என்று அரசாங்கம் ஒரு சட்டத்தைச் செய்தது. பின் சுலபத்தில் நகர்த்த முடியாத இரும்பு ஏணிகள் கிராமத்திற்குப் போகும் செங்குத்துப் பாதைகளில் வைக்கப்பட்டன.

மன்றம்

ஞாயிறு 7—7—57 சென்னை

காமன்வெல்த் அமைப்பு!

நார்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய வட ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் புரிந்துவிட்டு, பண்டித நேரு இலண்டனில் நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார்கள். காமன்வெல்த் நாடுகளிடை இருக்கும் பிணைப்பு அறுபடாமலிருக்க, ஆண்டுக்கொரு தடவை இலண்டன் மாநகரில் கூடுகிறார்கள், பிரிட்டிஷ் பிரதம மந்திரி வரவேற்கிறார், மகாராணி விருந்து வைக்கிறார், பத்திரிக்கைகள் படம் போட்டு வெளியிடுகின்றன. அதற்குப்பின் அடுத்த ஆண்டு மாநாடு வரை, காமன்வெல்த்தில் இருக்கும் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் அதிகத் தொடர்பு இருப்பதில்லை.

காமன்வெல்த் அமைப்பே, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிப்படையில் உண்டாக்கப்பட்டதாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் கட்டுப்பட்டு ஒன்றாக இருந்தோம் என்பதைத்தவிர, வேறு எந்தத் தொடர்பும் கிடையாது. இந்த நாடுகள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்திருப்பதற்கு! சாம்ராஜ்யத்திலிருந்து விடுபட்ட நாடுகள் வேறொரு வாசற்படி வழியாக காமன்வெல்த் அமைப்புக்குள் அழைத்து வரப்படுகின்றன.

காமன்வெல்த் அமைப்பு என்பது இங்கிலாந்துடன் மற்ற நாடுகள் இணைந்திருக்கப் பயன்படுகிறதேயன்றி, இங்கிலாந்தைத் தவிர்த்து மற்ற இரு நாடுகளுக்குள் ஒரு வித ஒற்றுமையை உண்டாக்கவில்லை. காமன்வெல்த் அமைப்பினால், இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு உண்டாகிறது, இங்கிலாந்துக்கும் பாக்கிச்தானத்துக்கும் தொடர்பு உண்டாகிறது, இங்கிலாந்துக்கும் இலங்கைக்கும், இங்கிலாந்துக்கும் தென்னாப்பிரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் கானாவுக்கும், இங்கிலாந்துக்கும் நியூசிலந்துக்கும், இப்படி இங்கிலாந்துக்கும் மற்ற நாடுகளுக்கும் தனித்தனியாகத் தொடர்பு உண்டாகிறது. ஆனால் காமன்வெல்த்தில் இருக்கிறோமென்ற காரணத்தால், இந்தியாவுக்கும் பாகிச்தானுக்கும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும், தென்னாப்பிரிக்காவுக்கும் கானாவுக்கும் தனியாக உண்டாகவில்லை. சுற்றி வருகிற குதிரைகளின் கடிவாளக் கயிறுகளெல்லாம் மத்தியில் இருக்கும் வேடிக்கைக்காரனின் கையில் இருப்பதுபோல, சுற்றியிருக்கும் காமன்வெல்த் நாடுகள் நடுநாயகமாக இருக்கும் இங்கிலாந்துடன் பிணைக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, தங்களுக்குள் வேறுவிதத் தொடர்புகளை உண்டாக்கிக்கொள்ளவில்லை. அதனால்தான், இந்தியாவுக்கும் பாகிச்தானத்திற்கும் சச்சரவு மூண்டால் வேறு யாரிடமாவது போகவேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வேறுபாடு ஏற்பட்டால் தீர்க்க முடியவில்லை. காமன்வெல்த் அமைப்பிலிருக்கிற காரணத்திற்காக ஒற்றுமை நிலவுவதாகக் காணோம். கானா பிரதமருடன் சமமாக உட்காருவதே தனக்குக் கௌரவக் குறைவென தென்னாப்பிரிக்க பிரதமர் நினைக்கலாம். காமன்வெல்த்தில் இருப்பதால் நேசமோ, பாசமோ ஏற்படவில்லை. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் அவமானப்படுத்தப்பட்டாலும், இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் பாதிக்கப்பட்டாலும், மலேயாவில் தமிழர்கள் பாதுகாப்பின்றி விடப்பட்டாலும், காமன்வெல்த்தில் ஒன்றாக இருந்தும் இந்தியாவால் அவைகளுக்குப் பரிகாரந் தேடவில்லை. ஆண்டுக்கொரு தடவைக் கூடி விருந்துண்ணவும் வேடிக்கை பேசவும் அந்த அமைப்பு பயன்படுகிறதேயன்றி, நம்மைப் பாதிக்கும் பல பிரச்சினைகளை அதன்மூலமாகத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. ஓரமைப்பில் இருக்கிறோமென்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. காமன்வெல்த்தில் இருந்தபோதிலும், காஷ்மீரச் சண்டை மூளுகிறது, இலங்கையில் தமிழர் குடியுரிமை மறுக்கப்படுகிறது, தென்னாப்பிரிக்காவில் இந்தியர் பிரிக்கப்படுகின்றனர்.

இந்த அமைப்பிற்குத் தலைமைதாங்கும் பிரிட்டனே, அமைப்பைச் சேர்ந்த மற்றவர்களின் எண்ணத்தை அறியவும் விருப்பமின்றி எகிப்துமீது படையெடுக்கிறது. பிரிட்டனுக்கும், காமன்வெல்த் அமைப்பிலில்லாத பிரான்சுக்கும் இருந்த ஒற்றுமையை காமன்வெல்த் நாடுகளிடம் அது காட்டவில்லை.

உலகில் அமைதியை நாட்ட, நேச மனப்பான்மையை வளர்க்க, காமன்வெல்த் அமைப்பு பயன்படுமெனக் கூறப்படுகிறது. இவ்வாறு கூறிக்கொண்டு, பல அமைப்புகள் ஆங்காங்கு உண்டாகிவிட்டன. நேட்டோ, சீட்டோ, பாக்தாத், கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பா இப்படிப் பல பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. இவைகளெல்லாம், எல்லா நாடுகளுக்கும் பொதுவாக உள்ள ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பலத்தைக் குறைத்துவிடுகின்றன. உலக நாடுகளிடையே அமைதியைக் காக்கவும், நேச மனப்பான்மையை உண்டாக்கவுமே ஐ. நா. மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அதைவிட்டு, அங்கொன்றும் இங்கொன்றும் ஐந்து நாடுகள், பத்து நாடுகள் ஒன்றுகூடி தனிப்பட்ட அமைப்புகளை உண்டாக்கிக்கொண்டால், அதிலும் அத்தகைய அமைப்புகளை உண்டாக்குவதில் ஐ. நாவில் உள்ள பெரிய நாடுகள் மும்முரமாயிருந்தால், ஐ. நாவுக்குள்ள மதிப்பு குறைந்துவிடுகிறது; அதில் சிறு நாடுகளுக்கிருந்த நம்பிக்கை குறையும். ஏதாவது ஒரு தனிப்பட்ட அமைப்பில், ஒரு வல்லரசுவின் பாதுகாப்பின்கீழ், நாம் இருந்தால்தான் தப்பிக்க முடியும் என்ற எண்ணம் பலமற்ற நாடுகளுக்கு உண்டாகும். பயத்துடன் அவநம்பிக்கை தொடரும், அவநம்பிக்கை சச்சரவை வளர்க்கும், சச்சரவுகள் போரில் கொண்டுபோய்விடும். சமாதானத்துக்கல்ல, சண்டைக்குத் தயாராகவே தனிப்பட்ட அமைப்புகள் உண்டாகின்றன. ஐக்கிய நாடுகள் மன்றத்தைத் தவிர்த்து, ஏற்பட்டுள்ள தனிப்பட்ட அமைப்புகளெல்லாம் அவசியமற்றவை, அவை சண்டைக்கான சூழ்நிலைக்கே வழி வகுக்கின்றன. ○

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ. 15·00
ஓராண்டு	...	ரூ. 8·00
ஆறுமாதம்	...	ரூ. 4·00
தனி இதழ்	...	16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ. 18·75
ஓராண்டு	...	ரூ. 10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

இலக்கியம்

நகையும் அழுகையும்!

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

காண்போரின் கண்ணுக்குக் குளிர்ச்சியையும், கருத்துக்கு மகிழ்ச்சியையும் தரவல்ல தோற்றப் பொலிவோடு அவள் திகழ்கிறாள்.

அவளைப் பார்ப்பவர்கள் அவள் மீது வைத்தகண்ணை வேறு பக்கம் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். பலருடைய கண்களும் அவள் மீது பட்டுக்கொண்டேயிருப்பதால், அவளுடைய நலம் கெட்டு விடுமோ என்று கூட அவளது பெற்றோர்கள் எண்ணுவார்கள். (அதற்காகக் கண்ணெச்சில் (திருட்டி தோடம்) கழிப்பதும் உண்டு.

ஆடும் அழகு மயில் போல் கடற்கரைச் சோலையிலே விளையாடி மகிழ்வதிலே அவளுக்குத் தனி ஆர்வம். தன்னைச் சேர்ந்த அண்டை வீட்டுப் பெண்களோடு கடற்கரைச் சோலைக்குச் செல்லுவதும் எல்லோரும் சேர்ந்து பூப்பறித்து மாலைதொடுப்பதும், பொம்மை விளையாட்டு விளையாடுவதும், ஓடிப் பிடித்துக் களியாட்டம் ஆடுவதும், கடல்நீராடி மகிழ்வதும் ஆன வழிகளில் தன் பொழுதினை போக்கிக் கொண்டிருக்கிறாள்.

அவளைச் சோலையிலே ஒருநாள் கண்டுவிட்ட ஆணழகன், அவளை எப்படியேனும் அடையவேண்டும் என்று உறுதி கொள்கிறான். நாள் தோறும் சோலைப் பக்கம் வருவதும் போவதுமாகச் சில நாட்களைக் கழிக்கிறான். மெல்ல அவள் கண் படுகிற மாதிரியில் நடமாடுகிறான். தன் காதற் குறிப்பைக் கண்ணால் அவளுக்கு உணர்த்துகிறான். மெல்ல அவளருகே வரவும், பேச்சுக் கொடுக்கவும் முயலுகிறான். நாளடைவில் அவளுக்கு அவன்பால் கனிவு ஏற்படுகிறது. கனிவு காதலாக மாறுகிறது. இருவரும் காதலர்கள் ஆகிறார்கள்.

சில காலம் களவொழுக்கத்திலே இருந்து விட்டு, இருவரும் தாங்கள் திருமணம் செய்து கொள்ள இருக்கும் எண்ணத்தைத், தத்தம் பெற்றோர்களுக்கு அறிவித்து விட்டு, முறைப்படி திருமணம் செய்து கொள்கிறார்கள்.

இருவரும் பதைப்புறு காதலால் ஒருவரையொருவர் இழுத்தும், அணைத்தும், முகமலரோடு முகமலரை ஒற்றியும், இதழோடு இதழை இனிது சுவைத்தும், நின்றும் இருந்தும் அன்போடு ஆடியும், பிணங்கியும் கூடியும் பெரிதும் மகிழ்ந்து இன்பத்துறையில் இருக்கின்றனர். சில திங்கள் இவ்வாறு கழிகின்றன. தலைவி கருவுறுகிறாள். தலைவன் தலைவியிடம் மிக்க அன்பு காட்டி அவளைப் பேணி வருகிறான்.

தலைவி கருவுற்றிருக்கிற இந்தநேரத்தில் தான் தலைவனின் உள்ளத்தைப் பரத்தையின்பால் திருப்பவேண்டும் என்று கருதிய பொல்லாப் பாங்கன் ஒருவன் தலைவனை அணுகுகிறான். தலைவன் பாங்கனின் மயக்க மொழிகளில் மயங்குகிறான். பாங்கன், பரத்தை ஒருத்தியைப் பற்றித் தலைவனிடம் பலவாறாக வியந்து கூறி, அவளிடம் பெறும் இன்பமே பேரின்பமாகும் என்றுசொல்லி தலைவனை மயக்குகிறான். தலைவன் பாங்கனின் சூழ்ச்சியில் வீழ்ந்து பரத்தை இல்லம் சேர்கிறான். தலைவியை மறந்து பரத்தையின் இன்பத்திலே திளைத்துக் கிடக்கிறான் தலைவன்.

தலைவன் பரத்தை வீடு புகுந்து விட்டான் என்பதைத் தோழியின் மூலம் அறிந்த தலைவி மிக்க மனங்கலங்கி வாட்டமும்வருத்தமும்எய்தி, செய்வதறியாது, இல்லறச்செயல்களை இனிது முடிப்பதிலே கருத்தைச் செலுத்தி வருகிறாள். தோழி தலைவியின் அருகே இருந்து, அவளுக்கு ஆறுதல் மொழிகள் பல கூறி, அவளது உடல் நலத்தைப் பேணி வருகிறாள்.

தலைவனிடம் பொருளில்லை, அவனிடமிருந்த கைப்பொருளெல்லாம் செலவழிந்து விட்டன என்பதை நாளாக நாளாக அறிந்து கொண்ட பரத்தை தலைவனை வெறுத்தொதுக்க முயலுகிறாள். தலைவன் தன் மதிப்பெல்லாம் இழந்து, மானம் அழிந்து பரத்தைக்குக் குற்றேவல் புரிந்து வரும் தாழ்ந்த நிலையை அடைகிறான்.

தலைவி நிறைதிங்கள் எய்திய பிறகு ஆண் மகவு ஒன்றை ஈன்றெடுக்கிறாள். தலைவி பல நாட்களாகப்பட்ட துயரங்களையும், தலைவனின் பிரிவால் ஏற்பட்ட வருத்தத்தையும், பெற்றெடுத்த தன் அருமைக் குழந்தையைக் கொஞ்சுவதின் மூலம் மறக்கிறாள்.

தலைவி ஆண்குழந்தை ஈன்றெடுத்துள்ளாள் என்ற செய்தியைப் பாங்கன்மூலம் அறிந்த தலைவன் மீண்டும் இல்லம் சேர்ந்து தாயையும் சேயையும் காணவேண்டும் என்ற துடிதுடிப்புணர்ச்சி கொள்கிறான். பரத்தையின் அடிமையாய் இருப்பதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள இதுவே ஏற்ற வாய்ப்பு என்று கருதி, பரத்தையிடம் தெரிவிக்காமல் அவள் அறியா வண்ணம் தன் இல்லம் நோக்கி ஓடி வருகிறான்.

தலைவி தானும் நீராடி, தன் அன்புக் குழந்தைக்கும் நீராட்டிக், குழந்தைக்கு வெள்ளுடை உடுத்தி, இளம் வெயிலில் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறாள். தலைவன் அப்பொழுது அச்சத்தோடும், வெட்கத்தோடும், கூச்சத்தோடும் வீட்டிற்குள் நுழைகிறான். தலைவி வீட்டிற்குள் யாரோ வீட்டினுள் நுழைகிறார்கள் என்று கருதித் திரும்பிப் பார்க்கிறாள், தலைவன் பூனைபோல் அடங்கி ஒடுங்கி வருவதைக் கண்டு திடுக்கிட்டுத் தன்னை ஒருவாறு தானே தேற்றிக்கொண்டு தலைவனை மீண்டும் ஏறெடுத்துப் பார்க்காமல், குழந்தையைக் கொஞ்சி, உச்சி மோந்து, முத்த மிடுவதிலே தன் கவனத்தைச் செலுத்துகிறாள். தன் மீது தலைவி வெறுப்புக் கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்துகொண்ட தலைவன் மெல்ல படுக்கையறை சென்று படுக்கையில் படுத்துக்கொள்கிறான். தலைவியாவது தோழியாவது தன்னிடம் வருவார்கள் என்று நீண்டநேரம் எதிர்பார்க்கிறான். இருவரும் தலைவனைப் பொருட் படுத்தாமல் ஒரு புறம் உட்கார்ந்திருக்கிறார்கள்.

தலைவன் தாமே எழுந்து போய்த் தலைவியைத் தேற்றிப் பார்ப்போம் என்று கருதிக் கொண்டு, தலைவியிடம் நெருங்குகிறான். தலைவி தலைவனை நிமிர்ந்து பார்க்காமல் குழந்தையைப் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். தலைவன் சிறிது நேரம் நின்று பார்த்துக்கொண்டிருந்துவிட்டுக் குழந்தையைத் தூக்க கையைக் குழந்தையின் அருகே கொண்டு போகிறான். தலைவி உடனே வெடுக்கென்று அவனது கைகளைத் தட்டிவிட்டுக் குழந்தையை வாரி எடுத்து அணைத்துக் கொள்கிறாள்.

தலைவன் தலைவியைப் பார்த்து, "கண்ணே! என்னை மன்னித்துவிடு! நான்தான் தவறு செய்துவிட்டேன்! நீ என்னை மன்னிக்க மாட்டாயா?" என்று வினவுகிறான்.

தலைவி வாய்பேசாமல் குழந்தையின் மெல்லிய தலையை அன்பால் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

"நான் முட்டாள் தனமாய் பாங்கனுடைய பேச்சைக் கேட்டு மதிமயங்கிப்போனேன். இப்பொழுது என்னுடைய தவறை நான் உணருகிறேன். இனி இப்படிப்பட்ட தவற்றை ஒருநாளும் நான் செய்யமாட்டேன். இது உறுதி. நீ என்னை நம்பு!" என்று சொல்லிக் கொண்டே தலைவன் தலைவியின் தோள்மீது கையை வைக்கிறான். தலைவி அவனது கையைப்பிடித்து உதறித் தள்ளிவிடுகிறாள்.

தலைவன் "ஏன் இப்படிச் சினந்து கொள்கிறாய்? என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள உனக்கு மனமில்லையா? நான் இவ்வளவு இரங்கிக் கூறியும் உனக்கு மனம் இளகவில்லையா?" என்று கேட்டுக் கொண்டு அவளது புடவையின் முந்தானியைப் பிடிக்கிறான். தலைவி வெடுக்கென்று எழுந்து புடவை முந்தானையை வெட்டி இழுத்துக்கொண்டு குழந்தையைத் தோழியின் கையில் கொடுத்துவிட்டுக் கொல்லைப்புறமுள்ள கடற்கரைச் சோலைக்குப் போய்விடுகிறாள்.

தலைவன் அவளைப் பின் தொடர்ந்து செல்கிறான். தலைவி கடற்கரைச் சோலையிலுள்ள புன்னைமரம் ஒன்றின் நிழலிலே போய் நிற்கிறாள். தலைவன் அவள் பின்னால் போய் நின்றுகொண்டு, "இப்பொழுதெல்லாம் நீ உன் தோழிமார்களோடு சேர்ந்து இங்கு பாவை விளையாட்டு விளையாடுவதில்லையா?" என்று வினவுகிறான். தலைவி விடையேதும் கூறாமல் அப்படியே நிற்கிறாள்.

தலைவன் தலைவியை நோக்கி "நீ நெய்தல் மலர்மாலையை ஏன் சூடிக்கொள்ளவில்லை? நான் தொடுத்துக் கொண்டு வரட்டுமா?" என்கிறான் அதற்கும் தலைவி வாய்பேசாது நிற்கிறாள்.

பிறகு தலைவன் அவள் முன்னால் வந்து நின்று வணங்கி

(9-ம் பக்கம் பார்க்க)

மாம்பழ மகாத்மியம்

'கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றி மூத்த' தமிழ மரபில் மூன்று என்ற எண்ணிற்கு எப்படியோ ஒரு தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. மூவேந்தர், முத்தமிழ், முக்கனி, முக்காலம், என்றெல்லாம் மூன்றாக சேர்த்துச் சொல்வதிலே ஒருமகிழ்ச்சி. மா, வாழை, பலா ஆகிய மூன்று கனிகளின் தொகுப்பே முக்கனி. இந்த முக்கனியுள் முதற்கனி மாங்கனி, மாம்பழம் தென்னகத்துக்கே உரிய தீஞ் சுவைக்கனி, இந்த கனியின் சுவையிலே தன்னைமறந்தோர், தன் நினைவை இழந்தோர் பலர். அந்த பலருள் ஒருவர் பண்டிதநேரு. முரசொலித்து, படையெடுத்து, அகழ்கடந்து, அரண் அழித்து இந்தியாவில் நுழைந்த மாவீரன் அலக்சாண்டரின் மனதைக் கவர்ந்தது இம்மாங்கனி சிந்துநதி ஓரத்தில் மாமரங்களைநட்டுவளர்த்து மாம்பழத்தின் மேலுள்ள தன் நாட்டத்தைக் காட்டிக்கொண்டார் அவர். மாங்கனிபால் மனமிழந்த வெளிநாட்டாருள் முதல்வன் என்ற சிறப்பும் அம் மாவீரனுக்கு இதனால் அமைந்தது, அதன்பிறகு தென்னகத்தில் காலூன்றிய சினநாட்டு வரலாற்றுப் பேராசிரியர் உயன் சயாங் என்பவரின் கண்கள் இப்பழத்தைக் கண்டு களித்தன, நா உண்டு ரசித்தது. அதன் விளைவு மாம்பழம் சில வரலாற்றிலே இடம் பெற்றதோடு வெளிநாட்டிலும் விளம்பரம் பெற்றது. இந்தியத் துணைக்கண்ட எல்லைக்கு அப்பால் இப்பழத்தின் புகழ்வளர வழி வகுத்தவர் இவ்வரலாற்றுப் பேராசிரியரேயாவார்.

சங்க இலக்கியங்களிலும், அதன் பின்னர் தோன்றிய ஏடுகளிலும் மாங்கனி சிறப்பான இடம் பெற்றுள்ளது. மங்கையரின் கதுப்புமிக்க கன்னங்களுக்கு உவமை தேடுகின்ற கதாசிரியர்கட்கு ஓடிவந்து உதவிபுரிவது மாம்பழம்தான். வடநாட்டு இலக்கியங்களிலும் மாம்பழம் இடம் பெறத்தவறவில்லை, வால்மீகி வரைந்த இராமாயணத்திலும், பழத்தின் புகழ் பாடப்படுகிறது. எனவே இத் தீஞ்சுவைப்பழம் தென்னகத்து மண்ணில் ஆண்டுகள் ஐயாயிரத்துக்கு முன்னதாகவே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது என்று தெரிய வருகிறது. இந்திய வரலாற்றில் முகலாய வல்லரசின் போது எழுதப்பட்ட 'எயின்-இ-அக்பாரி' என்ற ஏட்டில் பலவகைப்பட்ட மாம்பழங்கள் பற்றியும், அவைகளின் தோற்றம், பொலிவு, சுவை ஆகியவை குறித்தும் விளக்கமாக விவரமாக குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பொழுதுங்கூட ஆந்திர நாட்டில் ஒரு மாந்தோப்பு முகலாய மன்னருள் ஒருவரான சகாங்கிரின் புகழ்பாடி நிற்கிறது. நமது கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மாங்கனியின் புகழ்பாடி ஒரு சாகாத காவியத்தையே 'மாங்கனி' என்ற பெயரில் இயற்றித் தந்துள்ளார். மாம்பழம் திராவிடத்தின் சொத்து, தேசிய பழம், வீடுகளில் ஊறுகாய்க்கும், துவையலுக்கும் மாங்காய் பயன்படுவதும், மாம்பழம் சிறந்த சத்துள்ள உணவாகக் கருதப்படுவதும் யாவரும் அறிந்ததே.

இத்தகைய கீர்த்தி பெற்ற மாம்பழம் இந்த அணுகுண்டு யுகத்தில் அகில உலக அரங்கில் சிறப்பான இடம் பெற்றுள்ளது. ஆசிய சோதி, அகிலஉலக மாணிக்கம், அலகபாத் வீரர், முடிசூடா மன்னர், பண்டிதநேரு மாதம் தவறினாலும் பயணம் தவறாத வகையில் உலகசுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும்பொழுது மாம்பழத்தை உடன்கொண்டு செல்லத்தவறுவதில்லை. முன்னொரு சமயம் உலகப் பேரறிஞர் பெர்னாட்சா அவர்கட்கு தென்னகத்திலிருந்து கொண்டுசென்ற இத்தீஞ்சுவைக் கனியை இந்தியாவின் முதல்வர் நேருபிரான் வெட்டிக் கொடுக்க, அந்த வெண்தாடி வேந்தர் விருப்போடுசுவைத்துத்தின்றகாட்சி பத்திரிக்கைகளிலே படமாகவும், அவர் பழத்தைப் புகழ்ந்துபேசியமொழிகள் பத்தி பத்தியாகவும் வெளிவந்தன. நேருவும் அந்த நிகரற்ற அறிஞரின் நெஞ்சில் உறைந்தார். அதன்பிறகு பண்டிதர் இரசியாவில் பயணம் செய்தபொழுதும சேலத்து ஒட்டு மாம்பழம் அவர் மூட்டை முடிச்சுகளோடு இடம் பெறத்தவறவில்லை. இரசியத் தலைவர்களான புல்கானினும், குருசேவும் மாம்பழம் சுவைத்தனர், மனதை இழந்தனர், மயங்கித் திளைத்தனர். விருந்துகளிலும், விழாக்களிலும் மாம்பழங்களை தானே வெட்டி வழங்கினாராம் நேரு இன்னும் சிரியாவில் வரவேற்பு நார்வேயில் கோலாகலம் டென்மார்க்கில் கொண்டாட்டம், சுவீடனில் ஊர்வலம், இங்கிலாந்தில் புகழ்மொழி என்ற வகையில் மேனாட்டில் பவனிவரும் பண்டிதர் அணுக்குண்டுவைவிட அற்புத ஆற்றல்படைத்த ஆயுதமாக மாங்கனியைப் பயன் படுத்திவருகிறார் என்பதை செய்தித் தாள்கள் சித்தரித்துக் காட்டுகின்றன. 'மாம்பழமாகத்மியத்தை' உணர்ந்து பயன்படுத்தும் உத்தமர் அவர் ஒருவரே என்றால் மிகையாகாது. பொதுவுடமை நாடுகளுக்கு இப்பழம் தந்து தொடர்புகொண்ட பண்டிதர் மேலை நாடுகளுக்கும் கனி தந்து புகழ்பெற்றதன் மூலம் ஆசிய உலக அரசியலில் மட்டுமல்ல, மாம்பழ பங்கீட்டிலும் தான நடுநிலைமைக் கொள்கையையேகையாண்டு வருவதாகப் பறைசாற்றிக் கொள்கிறார் போலும். இந்த முக்கனியுள் முதற் கனியின் இன்சுவையால் உலகத்தை காத்துச் சிறப்பிக்கும் 'ஆறுமுகத்துள்' ஒரு முகம் என்ற சிறப்பும் இவருக்குக் கிட்டியுள்ளது. ஐசனோவர், குருசேவ், டிட்டோ, மாசேதுங், பொப்பாண்டவர் ஆகிய ஐவரோடு இவரையும் சேர்த்து அகில உலக நலம் பேணும் அறுவர்' என்று புகழ் பாடி மகிழ்கிறது ஒரு மேனாட்டு ஏடு.

தென்னகம், திராவிடம் தந்துள்ள கிருட்டிண மேனன் என்ற பறக்கும் தட்டும், அற்புதமான இம்மாம்பழமும் அகில உலக அரங்கில் நேருவை பெருந்தலைவர்கள் பட்டியலிலே இடம்பெற வைத்துள்ளன. ஆனால் இந்த மாம்பழங்களை அனுப்பித்தந்து நேருவுக்கு மங்காத புகழையும், மாறாத சிறப்பையும் வாங்கித் தருகின்ற தென்னகம் தேம்புகிறது, திண்டாடுகிறது. சென்ற இடமெல்லாம் சிறப்பும் போன இடமெல்லாம் புகழும், பேசும் இடமெல்லாம் பீடும் பெறுகிற பண்டிதநேரு நாட்டு நிலையை மறந்துவிட முடியாது. அவர் மார்பிலே பிரளுகின்ற மலர்மாலை இங்கே மரண ஓலை வாங்கிக் கொண்டிருக்கின்ற ஏழைகள் வாழ்விலே இன்பம் சேர்க்க உதவாது. கோப்பன் கேகனில் அவர் அருந்திய ஆப்பிள்ரசம் நாவுக்கு ருசியாக இருந்திருக்குமே தவிர நாட்டின் பசியை அடக்காது, அவருக்கு ஆங்காங்கே கிடைக்கின்ற பாராட்டும், பல்விருந்தும் இங்கே இருக்கின்ற பாரத புத்திரர்களுக்கு 'பண்டிதர் சிறப்பைப் பார்த்ீரா, பாரோர் புகழ்வதைக் கேட்டீரா' என்று பறைசாற்றுவதற்குப் பயன படுமே தவிர வறுமை கொட்ட, வாழ்வு கெட்டு, வதங்கி நின்று ஏங்குகின்ற பொது மக்களின் கண்ணீரைத் துடைக்க பயன படா. இதை அறிஞர் அண்ணா அவர்கள் அழகாக 'ஹோம் லேண்ட்' என்ற ஆங்கில இதழில் (23-6-57) குறிப்பிட்டுள்ளார். "ஒரு வீரனுக்குப் பெருமை அவனைச் சுற்றி விளங்குகின்ற பரிவட்டத்தின் ஒளிச்சிதறல்களால் ஏற்படுவதல்ல. ஆனால் அவனுடைய விடாமுயற்சியிலே முளைத்தெழுந்த குறிக்கோளின் மு[illegible] தான் பெருமை தரும்," எ[illegible] தென்னகத்துத் திருவி[illegible] நம் அறிஞர் அண்ணா அ[illegible] கள் குறிப்பிடுகின்ற [illegible] றுடரைப்படிக்கின்ற 'ஏக[illegible] தியர்கள்' ஆங்கிலத்தி[illegible] அடுக்குத்தொடரா? எ[illegible] ஆயாசப் படுகின்றார் க[illegible] தவிர அதனுள்ளே பொதி[illegible] கிடக்கும் பொருளைப் புரி[illegible] கொள்ள முயல்வதில்லை.

இது போலவே நாம் மத்திய அரசுக்குக் கொட்டியளக்கின்ற வரியும், மற்றும் தருகிற பணமும் எந்த மாநிலம் தருவதை விடவும் குறைந்த அளவுடையதல்ல. இன்னும் சொன்னால் நம் நிலைமைக்கும் தரத்திற்கும் அதிகமாகவே தருகிறோம். இந்தியத் துணைக்கண்டத் தி[illegible] புகழ் அலைகடலுக் கப்பாலும் ஒளிவீசுவதற்கு நாம் தந்துள்ள அறிவுச் செல்வங்கள் பொருட் குவியல்கள், உயர்ந்த எண்ணங்கள் உளக்கவரும் பொருட்கள் ஏராளம், ஏராளம். இருந்தும் இன்று தென்னகம் திராவிடம் அகில உலக அரங்கிலே இருந்து மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டத்திலேயே புறக்கணிக்கப்படுகிறது. கடல் கடந்து புகழ் பொலிந்து விளங்கிய தென்கடல் முத்து ரோம் ஆண்ட நீரோவையும் எகிப்தை ஆண்ட கிளியோபாத்திராவையும் ஆட்டிப் படைத்ததாக வரலாறு சான்று பகர்கிறது. இன்று கண்ணீரும் கம்பலையுமாய் அலைகின்ற எண்ணற்ற நெசவாளிகளின் மூதாதையர் தறி போட்டு நெய்து தந்ததாம் மிகுந்த பட்டுக்கள் வெளிநாட்டிலிருந்து பெரும் புகழை அள்ளி வந்திருப்பதாக சரித்திரம் கூறுகிறது. சீனாவிலிருந்து வருகின்ற மாசேதுங்கும் பர்மாவிலிருந்து வருகின்ற நுகர்வும், இலங்கையிலிருந்து வருகின்ற பண்டாரநாயகாவும், எகிப்தைச் சார்ந்த நாசரும் மற்றும் பலரும் இந்தியாவோடு எங்கள் நாடு பண்டைக்காலத்திலிருந்தே தொடர்புடையது, உறவு கொண்டது என்று பெருமையாகப் பேசிக்கொள்கிறார்கள் என்றால் அது இவ்விடத்தோடு அந்நாடுகள் கொண்ட தொடர்பைச் சுட்டிக் காட்டுகின்றன என்பதை யார் மறுக்க முடியும்.

சுருங்கச் சொன்னால் தென்னகம் தருகிற பல பொருளும், நல்லறிவாளர்களும் தொல் புகழ் ஏடுகளும் உலக அரங்கிலே இன்று அகில இந்தியாவிற்கும உயர்ந்த இடத்தைத் தந்துள்ளன. ஆனால் திராவிடம் புகழ் பெறவோ, கீர்த்திபெறவோ இவையெல்லாம் பயன்பட வில்லை. தென்னகத்தை சுடுகாடாக்கி வடநாட்டை சுந்தர பூமியாக்கிவருகின்றார்கள். புகழ் மண்டிக் கிடந்த தமிழ்நாடு புலம்பி அழுகிறது. பொலிவற்ற வடநாடு புகழ் பெறுகிறது.

—நாஞ்சில், செ. அன்பழகன்

இரா. செழியன்

"நேரமாகி விட்டதா?" சந் ...ம் காரை விட்டு இறங்கி ...ார்.

...டுத்தாற்போல் மற்றொரு ... காத்திருந்த டாக்டர் ...னையா "கடிகாரம் என்ன ...கிறது?" என்று கேட் ...

...ந்து நாற்பத்தெட்டு!"

...றித்த நேரத்துக்கு இரு ...ட்டு நிமிடம் கடந்து ...து"

...ருவரும் கடற்கரையை ...கி நடந்தார்கள்.

...தோறும ஐந்தரை ...க்கு டாக்டர் பொன்னையா ...ம் நீதிபதி சந்தானத்தை ...ந்த அடையார் கடற் ...ல் பார்த்துக் கொள்ள ... அவர்கள் சிரித்து ...க்கையாகப் பேசிக்கொள் ...ப் பார்த்தால் யாரும் ...யப் படுவார்கள், டாக் ... பொன்னையா என்றால் ...பத்திரியில் நடுக்கம் தான். ... தவறோ தாமதமோ ...தால் போதும், பொன ... எரிந்து விழுவார். ஒரு ...ல்காரரைப் பார்க்க ... போனால், கூட வருகிற ...ர்கள், நர்சுகள் இவர் ... பத்துப் பெருக்குக் ...ல் வந்து விடும். டாக்டர் ...னையா எவ்வளவு கடுமை ... காணப்பட்டாரோ, ...விடக் கடுங்கோபத்து ...நீதிபதி சந்தானம் நீதி ...த்தில் காணப்பட்டார். ...டம வழக்கு போகிற ...ேலே, "அந்த முரட்டு ...ிருந்து எப்படித் தப் ...? சாட்சிகளை நாம் ...து விசாரணை செய்வது ... நம்மை அவர் குறுக்கு ...ணை செய்ய ஆரம்பித்து ...ரே!" என்று வழக்கறி ... யோசிப்பார்கள். மிக ...கோபிகளாகமற்றவர்களுக் ...கு அந்த இரண்டு பேரும் ...க இருக்கும் பொழுது, அமைதியாக, இவர்களா சிரிக்க முடியும் என்ப ... காட்டுவதுபோல் ...துப் பேசுவார்கள். சில ...யகளில், தனியாக அந்தக் ...கரையில் சிரிப்பது தூரத் ... உட்கார்ந்திருப்பவர்களுக் ...கேட்கும்.

...ன்றைக்கு என்ன செய் ...?" பொன்னையா கேட் ...

...மூன்று மணிக்குக் கோர்ட் ...ருந்து வந்தேன். சிறிது ...மார்லோ எழுதிய சோக ...டகம் ஒன்றைப் படித்துக் ...ண்டிருந்தேன். அதனால் ...ன் வருவதற்கு நேரமாகி ...ட்டது."

...ருவரும் பிரபலமான ...கநாடகங்களைப் பற்றிப் ...னார்கள். சோபோகிளிஸ், ...க்ஸ்பியர், கேதே, இப்சன் ...டி சோக நாடகங்களைத் ...டிய மேதைகளின் பெயர் ... அடிபட்டன, பல நாடகங் ...ில் முக்கியமான பகுதிகளை ...தானம் ஒப்பித்தார். இலக்கியங்களில் அவர் ஏராளமாகப் படித்திருக்கிறார். உயர்தரச் சோக நாடகங்களில் வருகிற சில கட்டடங்களை அவர் சொல்லும் பொழுது, அந்த சோகம் அவருடைய இருதயத்திலிருந்து வருவது போலிருந்தது.

அடுத்தபடியாக சோக நாடகத்திலிருந்து சோகம் என்றால் என்ன என்று பேச்சு திரும்பியது.

"ஒவ்வொருவர் வாழ்விலும் சோகம் ஒவ்வோர் தடவை வருகிறது. பின் காலத்தால் மங்கி மறைந்து விடுகிறது. ஆனால் இருதயத்தில் ஏற்படுகிற சோகம் அது என்றும் மறையாது. அதற்குப்பின் வாழ்வே சாறுபோன சக்கையாக, அர்த்தமற்றதாக. ஆகிவிடுகிறது." என்று பொன்னையா சொன்னார்.

மணற்பரப்பில் இருவரும் உட்கார்ந்தார்கள்.

"காதலில் ஏற்படுகிற சோகத்தைப்பற்றி நீ கூறுகிறாய். சோகத்தில் மிக உச்ச நிலை காதலில் ஏற்படுகின்ற சோகம் தான்!" என்று சந்தானம் சொன்னார்.

ஐம்பது வயதுக்கு மேற்பட்ட இருவர் அமர்ந்து, காதலையும் சோகத்தையும் பற்றிப் பேசுவதை யாராவது கேட்டிருந்தால் அதிலும் நீதிபதி சந்தானமும் டாக்டர் பொன்னையாவும் போன்ற "இருதயமற்ற" "கல் மனம் படைத்த" இருவர்கள் பேசுவதைக் கேட்டால், சிரிப்புதான் வரும்.

டாக்டர் பொன்னையா ஆரம்பித்தார்:

"நீ இலக்கியத்தில் காதல் சோகம் இவைகளைப் படித்து விட்டுச் சொல்லுகிறாய். ஆனால் வாழ்க்கையில் அவற்றை நான் அனுபவித்திருக்கிறேன். எவ்வளவோ புண்களுக்கு நான் மருந்திடுகிறேன், எவ்வளவோ நோயாளிகளுக்கு ஆறுதல் சொல்கிறேன். ஆனால் ஆறாத புண் என் இருதயத்தில் இருக்கிறது.

அது முப்பதாண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அப்பொழுது கடைசி ஆண்டு மருத்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். என் குடும்பம் அதிக வசதியில்லாதது. ஆக நான் கல்லூரி விடுதியில் இல்லாமல், எங்களுக்குத் தூர உறவினர் ஒருவர் வீட்டில் தங்கி படித்து வந்தேன். அவர்கள் என்னை வரவேற்க வில்லை, ஆனால் ஒதுக்கித் தள்ளவும் முடிய வில்லை. உறவினர்கள் நடந்து கொள்வதைப் போல, அலட்சியமாகவே என்னை அவர்கள் நடத்தினார்கள். படித்து, நான் முன்னேறுவதில் அவர்களுக்கு அவ்வளவு பிரியமில்லை. ஏதாவது பரிட்சையில் சரியாகச் செய்யாமல், வருத்தத்துடன் நான் வீட்டுக்கு வந்தால் 'ஏன் இதற்கு வருத்தப்படுகிறாய்? படிப்பு வராவிட்டால், பேசாமல் கிராமத்துக்குப் போய்விடு!' என்று புத்திமதி சொல்வார்கள். அவ்வளவுக்கும் அவர்கள் வீட்டு முன்னால் இருந்த அறையில் நான் இருந்தேன். சாப்பாடு வெளியில் வைத்துக் கொண்டேன். அதற்குத்தான் இவ்வளவு தொந்தரவு. எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு நான் படித்து வந்தேன். வேறு யாராவது பையன்கள் கூப்பிட்டால், அவர்களுடைய அறையில் போய் சேர்ந்து படித்து விட்டு, வீட்டுக்கு வருவேன். அந்த அளவு இங்கு விளக்கு எரிக்கப் படாமல் இருப்பது மிச்சந் தானே! ஏதாவது ஒரு மாதம் வேறு எந்தக் காரணத்தினாலாவது மின்சாரம் கூடுதலாக ஆகிவிட்டால், வீட்டுக்காரர் முணுமுணுக்க ஆரம்பித்து விடுவார். நான் ஒருவாரத்துக்கு என் அறையில் விளக்கு போடாமல் இருப்பேன். அந்த நிலையில், படிப்பைத் தவிர வேறெதிலும் கவனம் செலுத்தாமல் நான் இருந்தேன் என்று கூறத்தேவையில்லை. ஏனென்றால் வேறெதிலும் கவனம் போக, என்னிடம் பணம் இல்லை.

ஒரு நாள் மாலை கடற்கரைப் பக்கமாக நான் நடந்து வந்து கொண்டிருந்தேன். உல்லாசமாக காற்று வாங்க வந்தேன் என்று நினைக்காதே! கல்லூரி விட்டதும், டிராம் வண்டியில் போனால் காசு செலவாகும் என்று, மாலையில் கடற்கரைப் பக்கமாக நடந்து போய்விடுவேன்! அன்றைய தினம் நான் நடந்து வரும் பொழுது, கடற்கரையிலிருந்து கூட்டங் கூட்டமாக நடந்து வந்து கொண்டிருந்தார்கள். நான் ஏதோ யோசித்தபடி நடந்து கொண்டிருந்தேன். யாரோ என் முதுகைத் தட்டினார்கள். நான திரும்பிப் பார்த்தேன். என்னுடன் படிக்கும் பாலகோபால் நின்று கொண்டிருந்தான்.

'எங்கே நீ பாட்டுக்கு வானத்தைப் பார்த்துக் கொண்டு போகிறாய்?' என்று அவன் சிரித்தான்.

'இப்படியே கடற்கரைப் பக்கமாக உலாவிவிட்டுப் போகலாம்' என்று நான் சொன்னேன்.

'எங்கேயண்ணா வேகமாக வந்து விட்டாய்?' என்று அவன் பின்னால் ஒரு பெண் வந்து நின்றாள்.

நான் அப்படியே பிரமித்து விட்டேன்! அதற்கு முன் அவ்வளவு அழகான—அது கூட வல்ல, கவர்ச்சிகரமான முகத்தை நான் பார்த்ததில்லை. ஒரு கணம், அந்த முகத்தைப் பார்த்ததும் என்னை மறந்தேன், உலகை மறந்தேன். ஒரு கணம் தான், என் திகைப்பைப் புரிந்து கொள்ளாத பாலகோபால், 'என்ன இங்கேயும் படித்த பாடத்தை உருப் போட்டுப் பார்க்கிறாயா?' என்றான்.

படித்த பாடமா அது? அது வரைப் படித்தறியாத பாடம், பார்த்தறியாத படம், ஆகா! எவ்வளவு அழகான கண்கள், எவ்வளவு மென்மையான செவ்விதழ்கள்!

பாலகோபால் ஏதோ கேட்டான். நான் ஏதோ உளறிக் கொட்டினேன்.

'நான் போகிறேன்!' என்று அவன் தன் தங்கையை அழைத்துக்கொண்டு சென்றான். நான் அவர்கள் சென்ற திக்கைப் பார்த்தபடி நின்றேன்,

அன்று இரவு பூராவும் எனக்கு உறக்கமில்லை. விளக்கை அணைத்து விட்டு—எங்கள் உறவினர்களுக்கு அது மிகுந்த திருப்தி—நான் அறையில் உட்கார்ந்திருந்தேன். ஏதோ புதுமையை, அதிர்ஷ்டத்தை, பெரிய புதையலை, மற்றவர்களுக்குத் தெரியாமல் கண்டு பிடித்த ஒருவன் எவ்வளவு துடிதுடிப்புடன் இருப்பானோ அவ்வாறு அமைதியற்று இருந்தேன். அறைக்குள் உட்கார்ந்திருக்க முடியவில்லை. வெளியில் வந்து உலவினேன். வானம் என்றைக்கு மில்லாமல் புதுப் பொலிவுடன், எண்ணற்ற நட்சத்திர மலர்களுடன் காட்சியளித்தது. காற்று மெதுவாக வீசியது. வேகமாக ஓடலாம் போலத் தோன்றியது. அதிலும் பாலகோபாலின் வீடு எங்கிருக்கிறது என்று தெரிந்தால், நேராக நான் அங்குபோய் இரவு பூராவும் நின்றிருப்பேன்.

நான் ஒரு முட்டாள்! பாலகோபாலை மாலையில் பார்த்த பொழுது, அவன் எங்கிருக்கிறான் என்பதைத் தெரித்திருக்கலாம். நான் திகைத்திருந்த நிலையில், எதுவும் கேட்க வில்லை.

மறு நாள் நான் கல்லூரி போனபொழுது, உடல் நலமில்லையா? காய்ச்சலா? என்று நண்பர்கள் கேட்டார்கள். 'அதிகமாகப் படிக்காதே, சிறிது நேரமாவது தூங்கு என்று சிலர் அறிவுரை பகன்றார்கள். நான் எதையுங் காதில் போட்டுக்கொள்ளாமல், பாலகோபால் எங்கிருக்கிறான் எனத் தேடிக்கொண்டு போனேன்.

ஒரு மரத்தடியில், நண்பர்களுடன் அவன் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான்.

'சிகரெட் குடிக்கிறாயா?' என்று அவன் பெட்டியை நீட்டினான்.

அவன் கேலி செய்கிறான் என்பது தெரியும 'எனக்கு வேண்டாம்!'' என்று உட்கார்ந்தேன்.

"குடிக்க மாட்டான் என்பது தெரியாதா? என்று பக்கத்திலிருந்தவர்கள் சொன்னார்கள்'

'அதனால்தானே கொடுக்க வந்தேன்' என்று பாலகோபால் சிரித்தான்.

'உன்னிடம் பாத்தால ஜி என்ன புக் இருக்கிறது' என்று கேட்டான்.

அவன் ஏதோ ஒரு பெயரைச் சொன்னான்.

'அந்தப் புத்தகம் எனக்கு ஒரு நாளைக்குத் தருகிறாயா?'' என்றேன்,

'தருகிறேன் ஒருநாள் என்ன ஒருவாரம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்!' என்றான்.

'நான் காலையில் வரட்டுமா?' என்று கேட்டேன்.

'நான் கொண்டுவருகிறேன், கட்டாயமாக'

'காலையில் அந்தப் பக்கம் வருகிறேன், அப்பொழுது பார்க்கிறேன்!

'சரி'

அந்தச் சமயத்தில் அவனுடைய வீடு எங்கிருக்கிறது என்று எனக்குத் தெரியாது. பாலகோபாலின் வீட்டில் போன் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். போன் புத்தகத்தை எடுத்துப் பார்த்தால், முகவரி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருந்தது. பாலகோபாலை விட்டு நான் வந்ததும், போய் போன் புத்தகத்தை முதல் வேலையாகப் பார்த்தேன். பாலகோபாலின் தந்தை பெயர் பத்மரூப பிள்ளை. போன் புத்தகத்தில் மூன்று 'பத்மரூப பிள்ளை' பெயர்கள் இருந்தன. ஒன்று புரசவாக்கத்தில், இரண்டாவது நுங்கம் பாக்கத்தில், மூன்றாவது தேனாம் பேட்டையில்! மூன்று இடங்களுக்கும் சுற்றி வந்து விடுவது என்று திட்டமிட்டேன்.

ஒரு யோசனை குறுக்கிட்டது. போனை எடுத்து, ஒவ்வொன்றாகக் கூப்பிட்டேன். அவர்கள் பதிலளித்ததும், 'பாலகோபால் இருக்கிறாரா?' என்று கேட்டேன். இரண்டு வீடுகளில் 'யார் பாலகோபால்? எந்த பாலகோபால்? என்று பதிலுக்குக் கேட்டார்கள. ஆக அந்த வீடுகள் நமக்கு வேண்டியன அல்ல என்று முடிவு கட்டினேன், மூன்றாவது நம்பரில், காலேஜுக்குப் போயிருக்கிறானே! என்று பதில்வந்தது. அதுதான் பாலகோபால் அவன் தங்கை இருந்த இடம்.

மறுநாள் காலை நான் சென்றேன், எனக்கிருந்த நல்ல உடைகளை மாட்டிக்கொண்டு, பாலகோபால் இருந்த இடம் பெரிய பங்களா, முன்னால் ஒரு பெரிய தோட்டம் சுற்றுச்சுவர் ஓரத்தில் கொடிகள் படர்ந்து தொங்கிக்கொண்டிருந்தன. நான் போனபொழுது மறு வழியாக பெரியகார் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தது. வீட்டையும் தோட்டத்தையும், காரையும் பார்த்ததும் எனக்குப் பயமாக இருந்தது. நான எதிர்ப்பார்த்ததைவிட அதிகமான தூரம எனக்கும் அந்த வீட்டுக்கும் மத்தியில் இருந்தது.

நான் உள்ளே சென்றபொழுது பாலகோபால்

அப்பொழுதுதான் பல் துலக்கிக்கொண்டிருந்தான், நான் வெளியில் உட்கார்ந்திருந்தேன் பாலகோபால் வந்தான். "இங்கு உட்கார்ந்துவிட்டாயா?'' என்று மாடியிலிருந்த தனது அறைக்கு அழைத்துச் சென்றான். பெரிய வீட்டுப் பையனுடைய அறைக்குள்ள அடையாளங்கள் அப்படியே இருந்தன. அலங்கோலமாகப் போடப்பட்ட புத்தகங்கள், அணியப்படாது மாட்டப்பட்டிருக்கும் சட்டைகள், கோட்டுகள், டைகள், மூலையில் வரிசையாகக் கிடந்த விதவிதமான பூட்கள், டென்னிஸ் பாட், ஒரு ஆங்கில சினிமா நட்சத்திரத்தின் படம், பெரிய நிலைக்கண்ணாடி, வேலைப்பாடான பூக்கள், செருகும் குவளை-அதில் பூங்கொத்துகள் வைக்கப்படவில்லை, சிகரெட் துண்டுகள் போடுவதற்காக பாலகோபால் அதை, உபயோகித்து வந்தான்-இவ்வாறு இருந்த அறையில் நான் போய் உட்கார்ந்தேன். நான் கேட்ட புத்தகத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு, அவன் வெளியேறினான். புத்தகத்தைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு, எழுந்து சுவற்றிலிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன், பாலகோபாலுடைய குடும்பத்தினர்-அவன், அப்பா, அம்மா, அவனுடைய தங்கை, தம்பி, ஆகியவர்களுடைய குடும்பப் படம் இருந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எடுத்தபடம்.

பாலகோபால் கல்லூரிக்குப் போக தயாராக வந்தான் நானும் கிளம்பினேன்.

நாங்கள் மாடிப் படிக்கட்டுகளில் இறங்கிக்கொண்டிருக்கும்பொழுது, தலைமயிரை உலர்த்திக்கொண்டு வசந்தா-அதுதான் அவளுடைய பெயர்-வந்தாள். கவிதைகள் படித்திருந்தால் ஒப்புமை சொல்லி வர்ணிக்கலாம். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு இருந்ததைவிட, அதிக அழகுடன் இருந்தாள. சில பெண்கள் அலங்காரம் செய்து, பவுடரால் மறைக்கப்பட்டு, நாணிக் கோணி அழகிகள் போல நிற்பார்கள். மற்ற சமயங்களில் அவர்கள்...அவர்களாகவே இருப்பார்கள். வசந்தா அலங்காரம் எதுவுமில்லாமல், தலைமயிரைக் கோதிக்கொண்டிருந்தாலும், அழகுடன் காணப்பட்டாள். அவள் விரல்கள் அசைவதும் தலை சாய்வதும், கண்கள் பொதுவாக மூடித்திறப்பதும், தனி அழகுடன் இருந்தன. எங்களை அவள் கவனிக்கவில்லை.

அடிக்கடி எதாவது காரணத்தை உண்டாக்கிக்கொண்டு பாலகோபால் வீட்டுக்கு நான் அடிக்கடி போகவே ஆரம்பித்தேன். பாலகோபாலும் அதை விரும்பி ஏற்றுக்கொண்டான், நன்றாகப் படிக்கக்கூடிய பையன் தன்னுடனிருப்பதில் அவனுக்கு ஒரு பெருமை! சிறுகச் சிறுக வசந்தாவுடனும் நான் பேசத் தொடங்கினேன். பாலகோபாலைப் பார்க்கப்போகும் பொழுதெல்லாம். வசந்தாவுக்காகக் காத்திருந்து ஒரு வார்த்தையாவது பேசாமல் நான் திரும்புவதில்லை.

ஆரம்பத்தில் அது மகிழ்ச்சிகரமாயிருந்தது, எனது அறைக்குத் திரும்பியதும் வசந்தாவுடன் பேசியதை நினைத்து இறும்பூதெய்துவேன். ஆனால் வர வர, மனம் அத்துடன் திருப்தியடையவில்லை. வேறு எதை எதைப் பற்றியோ பேசி விட்டுத் திரும்புகிறோமேயன்றி, நம்மைப்பற்றி காதலைப் பற்றி ஒன்றும் பேசவில்லை என்ற குறை தோன்றும். அவளிடம் எப்படி என்ன ஆரம்பிக்கவேண்டும் பேச வேண்டும், என்றெல்லாம் முன்கூட்டியே நினைத்து வைத்துக்கொள்வேன். இன்றைக்கு எப்படியாவது வசந்தாவிடம் என் உள்ளக் கிடக்கையை வெளியிட்டுவிடுவது என்ற உறுதியுடன புறப்பட்டுச் செல்வேன். இரண்டொரு தடவைகள் வசந்தாவுடன் தனியாக பேசிக்கொண்டு இருந்திருக்கிறேன். அப்பொழுது கூட என்னால் சொல்ல முடியவில்லை.

பார்க்பேர் ஸ்டாண்டிக்கு நான் சென்றிருந்தேன். கூட்டங்களிடை அகப்பட்டுச் சுற்றிவந்தேன். திடீரென்று ஒரு கடையில் வசந்தாவும் அவளுடன் கல்லூரியில் படிக்கும் நான்கைந்து பெண்களும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் மத்தியில் அவளுடன் நான் பேச விரும்பவில்லை. நான தூரத்தில் நின்றுகொண்டிருந்தேன். கடையில் ஏதோ வாங்கிக்கொண்டு, அவர்கள் வெளியில் வந்து நடந்தார்கள். நான் அவர்களைக் கவனித்தபடி பின்தொடர்ந்து சென்றேன்.

இருந்தாற்போல கூட்டம் சிதறி ஓடிவந்தது. ஒரு கடையில் தீப்பற்றிக் கொண்டதாம். தீ பரவுவதற்குள் வெளியேற சிலர் ஓடிவந்தார்கள். தீயை அணைக்கவும், வேடிக்கை பார்க்கவும் பலர் எதிர் திக்கில் ஓடினார்கள். எல்லாம் சேர்ந்து பரபரப்பான குழப்பமிருந்தது. அலைபோல, மக்கள் கூட்டம் வழியில் இருப்பவர்களை இழுத்துச் சென்றது. நான் கூட்டத்திற்குள் புகுந்து, நெருக்கப்பட்டுத் தவித்த வசந்தாவின் கையைப் பற்றி இழுத்துக்கொண்டேன, அவள் சத்தம் போடப்போனாள், என்னைப் பார்த்தும் திறந்த வாய் புன்னகையுடன் அடங்கியது.

ளுடைய தோழிகள் நான்கு பக்கத்திலும் சிதறிவிட்டார்கள். நான் வசந்தாவை அழைத்துக் கொண்டு சந்தடி குறைவான இடத்தில் ஒதுங்கிக்கொண்டேன். வசந்தா மெதுவாகத் தன் கைகளை விடுவித்துக் கொண்டாள்.

தீ அதிகமாகப் பரவவில்லை. ஒரு கடையில் மூலையில் மட்டும் சிறிது கரிந்து போனது, ஆனால் நெருப்பணைப்பவர்கள் மிகுந்த உற்சாகத்துடன், இரண்டு பக்கத்திலிருந்த ஐந்தாறு கடைகளையும் பிரித்து, இருந்தவைகளை மேலெல்லாம் தண்ணீரைக் கொட்டி, அசிங்கப்படுத்தி விட்டார்கள்.

பரபரப்பு அடங்கியது. வசந்தாவைத் தேடிக் கொண்டு மற்ற பெண்கள் வந்தார்கள். அவர்களுடைய கல்லூரி பஸ் வெளியில் காத்திருப்பதாகவும் உடனே போகவேண்டுமெனவும் அவர்கள் கூறினார்கள். 'காரை வரச்சொல்லியிருந்தேனே. நான் போகிறேனே' என்றாள் வசந்தா. கல்லூரிப் பெண்கள் பிரிந்தார்கள். நானும் வசந்தாவும் வெளியில் வந்து காரைத் தேடினோம். கார் வரவில்லை.

'டிராமில் போக வேண்டியது தானே! "வசந்தா கிளம்பினாள்.

உங்கள் வீடுவரை வருகிறேன் என்று நானும் வந்தேன்.

டிராமில் நாங்கள் எதுவும் பேசவில்லை கடமுட என்ற சத்தத்தில் எதுவும் பேசவும் முடியாது.

கடையில் இறங்கினோம். அங்கிருந்து அரை பர்லாங்கு தூரத்தில் வசந்தா வீடு இருந்தது.

நீண்ட சாலை அமைதியாகக் கிடந்தது. மேலே மரங்கள் காற்றில் அசைவதைத் தவிர வேறு சத்தம் கிடையாது. நிலவு வெளிச்சத்தில். மரத்தின் அடியில் நிழலும் ஒளியும் மயங்கிக் கிடந்தன. நாங்கள் இருவரும் மெதுவாக நடந்தோம். பேச்சு இல்லை. எனது இருதயம் படபட வென்று அடித்துக் கொண்டிருந்தது. அவளோ, நிலவின் அமைதியைப்போல் அழகின் அமைதியாக நடந்து வந்தாள். நான் சொல்ல நினைத்ததை எப்படியாவது சொல்லி விடுவது என்று நினைத்தேன்.

'நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்." மேலே பார்த்தவண்ணம் சொன்னேன்.

'சொல்லுங்கள்!"

'கோபம் வராதே!' நான் முன் கூட்டியே சொல்லி வைத்தேன்.

'கோபம் வரும்படியாக நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்!'

பெண்கள் மிகப் பொல்லாதவர்கள். எவ்வளவு எளிதில் அவள் பதில் சொல்லிவிட்டாள். அவள் அதை வரவேற்பாளா, மாட்டாளா என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பேசாமல் நடந்து வந்தேன். இன்னும் இருநூறு அடி தூரம்தான் இருந்தது. அதற்குள் சொல்லியாகவேண்டும். மறுமுறை இதுபோன்ற இரவு, நிலவு, தென்றல், தனிமை இவை கிடைக்குமா?

'எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை!" நடையின் வேகத்தை மட்டுப்படுத்தினேன்!

'அப்படியானால் சொல்ல வேண்டாம்! அவளும் மெதுவாக நடந்தாள்.

இந்தப் பெண்களை நாம் வெல்லவே முடியாது.

'நான் சொல்வது எதிர்பாராததாக இருக்கலாம்.'

அவள் பேசவில்லை,

'நான் சொல்லப்போவது தெரியுமா?'

அவள் தலையைத் தாழ்த்தி, இலேசாக அசைத்தாள், மங்கிய வெளிச்சத்திலும், நாணத்தால் அவள் கன்னம் சிவந்திருப்பது தெரிந்தது.

அதற்குள் தோட்டத்தின் வாசற்படி வந்தது.

'மறுபடியும் எப்பொழுது பார்க்கலாம்? பரிதாபத்துடன் கேட்டேன்.

'நாளைக்கு!' கனிவுடன் பதிலளித்தாள்.

'மாலை?'

'உம்! புன்னகையை வீசிவிட்டு, அவள் நடந்தாள்.

தள்ளாடிக்கொண்டு நடந்து சென்றேன். எனது அறைக்கு வந்த பொழுது இரவு ஒரு மணிக்கு மேலாகியது. வாழ்வில் அவ்வாறு ஒருநாள் தான ஒருவனுக்குக் கிடைக்க முடியும்.

மறுநாள் பாலகோபால் வீட்டிற்குச் சென்றபொழுது, வசந்தா தோட்டத்தில் நின்று கொண்டிருந்தாள். ஏதோ பேசிக்கொண்டிருந்தோம், பேசிக்கொண்டே இருந்தோம். பல ஆண்டுகளாக ஒருவரையொருவர் நன்கு தெரிந்தது போலிருந்தது.

பிறகு கடிதங்கள் மாற்றிக் கொண்டோம். அவளுடைய படம் என் அறையில், ஒரு புத்தகத்தில் மறைந்திருந்தது. என்னுடைய படமும் அவளிடமிருந்தது. அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போன் செய்வேன். வசந்தாவின் குரல் கேட்டால், நான் பேசுவேன். இல்லாவிட்டால் வேறொரு நம்பர் வேண்டுவதாகக் கேட்டு, தப்பு நம்பர் வந்ததாகப் பாவனை செய்து போனை வைத்துவிடுவேன்.

வசந்தா வீட்டைவிட்டு அதிகமாக வெளிவருவதில்லை. இருந்தாலும், பாலகோபாலைத் தேடிக்கொண்டு அவன் நிச்சயமாக இல்லாத நேரங்களில் செல்வேன். வசந்தா நிச்சயமாகக் காத்திருப்பாள். அவளுடைய அம்மா, அப்பா இருந்தால், தனக்குத் தெரியாத பாடம், புரியாத பக்கம் ஏதாவது கொண்டுவந்து காட்டுவாள். இருவரும் சேர்ந்து அந்தப் புதிரை விளக்க முற்படுவோம். எங்களைப் பற்றியோ, எங்கள் காதலைப் பற்றியோ நாங்கள் பேசியதில்லை. அதை எங்கள் கடிதப் பகுதிக்காக ஒதுக்கி வைத்திருந்தோம்.

அந்த நாட்கள்தாம் என் வாழ்வில் குதுகலமான நாட்கள்!"

டாக்டர் பொன்னையா தன் கதையை நிறுத்தி சூழ்ந்திருந்த இருட்டைப் பார்த்தார். அவரது மனம் இறந்த காலத்தில் அமிழ்ந்திருந்தது. எதிரில் நீதிபதி சந்தானம் மண்ணில் கோடுகள் போட்டபடி இருந்தார்.

டாக்டர் பொன்னையா பெருமூச்செறிந்தபடி தொடங்கினார் "அதற்கப்புறம் இருண்ட காலம் ஆரம்பமானது. ஒரு நாள் மாலை கல்லூரியை விட்டுக் கிளம்பும்பொழுது, பாலகோபால் என்னிடம் வந்தான்.

போகலாமா? என்று நான் தயாரானேன்.

இல்லை. இனிமேல் நீ என் வீட்டிற்கு வரவேண்டாம்' என்று சொல்லிவிட்டு அவன் சென்றான்.

எனக்கு அவன் சொன்னது விளங்கவில்லை. அவர்கள் வீட்டிற்குப் போன் செய்தேன். இரண்டு மூன்று தடவைகள் வேறு யாரோ எடுத்தார்கள். கடைசியாக வசந்தாவின் குரல் கேட்டது. எப்பொழுதும்போல மகிழ்ச்சிகரமாகவே ஒலித்தது போனில் விளக்கமாகப் பேச முடியவில்லை. அவளுடைய பக்கத்தில் யாரோ இருக்கிறார்கள் என்று தெரிந்தது. மறுநாள் காலை கல்லூரிக்கு அருகில் அவளைச் சந்திப்பதாகக் கூறினேன்.

மறுநாள் வசந்தா எனக்காகக் காத்திருந்தாள். நான் எழுதிய காதற் கடிதம் அவளுடைய அப்பாவின் கையில் கிடைத்து விட்டதாகத் தெரிந்தது. அவர் சத்தம் போட்டாராம், வசந்தாவைக் கண்டித்தாராம், பாலகோபாலுக்கும் வசவு கிடைத்ததாம்.

நான் கலக்கமடைந்தேன். ஆனால் வசந்தா சிரித்தாள் 'இதற்கெல்லாம் கவலைப்பட்டால் முடியுமா?

அவளுடைய களங்கமற்ற உள்ளத்தில், உலகத்தின் களங்கம் பிரதிபலிக்கவில்லை. அதனால் தைரியமாக அவள் இருந்தாள். எனக்கு ஏதோ துயரத்தின் ஆரம்பம் போல இருந்தது.

அவளுடைய கல்லூரிப் பரிட்சைகள் முடிந்ததும், அவளைப் பார்ப்பது முடியாது போயிற்று போன் செய்தால், கண்டிப்பாக மற்றவர்கள் பதிலளித்தார்கள். கட்டுக் காவல், கண்காணிப்பு அதிகமாகி விட்டது. ஆனால் இவ்வளவையும் மீறி, இரண்டு மாதத்திற்கு மூன்று மாதத்திற்கு ஒரு கடிதம் எனக்கு வரும். அவள் மிக உறுதியுடனிருந்தாள். துயரமோ, துக்கமோ ஒரு துளிகூட அந்தக் கடிதங்களில் இருப்பதில்லை. ஓராண்டு ஆகிவிட்டது.

அவளிடமிருந்து வந்த கடைசிக் கடிதத்தில், தன்னுடைய திருமணத்திற்குப் பெற்றோர்கள் ஒருவாரமாக ஏற்பாடு செய்வதாகவும், அன்று காலையில் 'அவரைத்தவிர வேறு யாரையும் நான் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை' யென்றும் அவள் தன் அம்மாவிடம் கண்டிப்பாகக் கூறிவிட்டதாகத் தெரிவித்திருந்தாள். (கடிதத்தில் எழுதும் பொழுது "அந்த அவர்' யார் என்பது உங்களுக்குத் தெரியும், என் அம்மா அப்பாவுக்கும் தெரியும்" என்று வசந்தா எழுதியிருந்தாள்.) கடைசியாக அந்தக் கடிதத்தில் ஒன்றுகுறிப்பிட்டிருந்தாள் மலர் அரும்புவதற்குமுன் கிள்ளிவிட்டால், அதில் மணம் இல்லாமல் செய்துவிடலாம். ஆனால் மலர்ந்தபின், அது மணம் வீசுவதைத் தடை செய்ய முடியாது. அதைப் போலக் காதல் வராமல் முன் கூட்டியே தடை செய்துவிடலாம். ஆனால் காதல் மலர்ந்தபின் அதன் மணத்தைத் தடை செய்ய முடியாது.

காதலை மலருடன் ஒப்பிட்டு அவள் எழுதினாள். அவளே ஒரு மலராக, இந்த உலகின் சாதி சமய, ஏழை பணக்காரத் தாழ்வுகளாகிய சக்திக்கு அப்பாற்பட்டு முளைத்து எழுந்து நிற்கும் செந்தாமரையாக இருந்தாள்.

மலருக்கு கதிரொளியும் நல்ல காற்றும் வேண்டும். இருட்டறையில் அடைக்கப் பட்டால், வாடி வதங்கி விடும். கட்டுக் காவலால் அடைக்கப் பட்ட அவளும் வாட ஆரம்பித்தாள்.

வசந்தாவுக்கு அடிக்கடி மயக்கம் போடுவதாகவும், அதற்குப்பின் காய்ச்சல் வருவதாகவும், எனக்குச் செய்திகள் வந்தன. நான் டாக்டர் பட்டம் பெற்று விட்டேன். அந்த நோயாளியைக் கவனிக்க என்னால் முடியவில்லை.

பெரிய பெரிய டாக்டர்கள் அங்கு போகத் தொடங்கினார்கள். என்ன நோய் என்பதில் அவர்களுக்குள் மாறுபாடு இருந்தது. அவர்கள் திரும்பி வந்ததும், மெதுவாக அந்த டாக்டர்களிடம் போய் நான் விசாரிப்பதுண்டு. அவர்களால் சரியாகக் கூறத் தெரியவில்லை. அவர்கள் சொல்வதிலிருந்து வசந்தா அதிகப் பலவீனமடைந்துகொண்டிருக்கிறாள் என்பது எனக்குத் தெரிந்தது.

ஒரு நாள் இரவு பதினொரு மணி இருக்கும். என் அறைக் கதவு தட்டப் பட்டது. திறந்தேன் பாலகோபால் நின்றான்

'உடனே வா! உன் பெயரைச் சொல்லி அவள் புலம்பிக்கொண்டிருக்கிறாள்!' என்றான்.

உடனே உடையை மாட்டிக்கொண்டு ஸ்டெதாஸ் கோப்பையும் என் மருத்துவப் பெட்டியையும் எடுத்துக்கொண்டு கிளம்பினேன். போகும்பொழுதே, அவளுடைய நிலையைப்பற்றிக் கேட்டுக்கொண்டேன். நான் அவளுடைய காதலன் மட்டுமல்ல, ஒரு டாக்டர் கூட எப்படியும் அவளைக் காப்பாற்றி விட முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அப்பொழுது ஒரு 'பெரிய டாக்டராக' நான் ஆகவில்லை என்றாலும், எனக்குத் தெரிந்ததைத் தெளிவாக நான் தெரிந்து வைத்திருந்தேன். போகும் வழியிலேயே பாலகோபால் சொன்னதை வைத்து, வசந்தாவுக்குள்ள நோயைப் பரிசீலனை செய்து கொண்டிருந்தேன்.

நான் வீட்டிற்குள் நுழைந்தபொழுது, கீழிருந்தவர்கள் செயலற்று இருந்தார்கள், என்னைக் கண்டதும் பேய் பிசாசுக்கு வழிவிடுவதைப்போல விலகி நின்றார்கள்.

நான் வேகமாக மாடிக்குச் சென்றேன். டாக்டர் வெளியே வந்தார், தலையைக் குனிந்த வண்ணம் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றேன்.

வசந்தாவின் அம்மா மெல்லிய குரலில் அழுதுகொண்டிருந்தார்கள். தலையைப் பிடித்துக்கொண்டு வசந்தாவின் அப்பா உட்கார்ந்திருந்தார். நான் படுக்கையினருகே போய், வசந்தாவின் கையைப் பிடித்துப் பார்த்தேன்.

வசந்தா இறந்து விட்டாள்.

இருதயம் அடங்கி விட்டது.

நான் அழவில்லை ஒரு கல்போல ஆகிவிட்டேன்.

இறந்த பின் கூட வசந்தாவின் முகத்திலிருந்த மலர்ச்சி நீங்கவில்லை. ஏதோ ஒரு இனிய கனவைக் கண்டு உறங்கும் நிலையில் அந்த முகம் இருந்தது.

யாரும் என்னைக் கவனிக்கவில்லை. மெதுவாகக் குனிந்து முத்தமிட்டேன், குளிர்ந்த உதடுகள் மூடிக்கிடந்தன அதுதான் நான் தந்த முதல் முத்தம், கடைசி முத்தம் அதுவே!

அந்த அறையை விட்டு வெளியே வந்தேன். நான் வெளியே வந்த பிறகுதான், அவள் இறந்துபோன செய்தி எல்லோருக்கும் தெரிந்தது. அழுகையொலி கிளம்பியது.

நான் வீட்டை விட்டுத் திரும்பிப் பாராமல் நடந்தேன்.

முதலில் ஏற்பட்ட மனக்கலக்கத்தை மறக்க, எனது வேலையில் மிக மும்முரமாக ஆழ்ந்தேன். நேரம் முழுவதையும் கல்லூரியில், நூல் நிலையத்தில், ஆஸ்பத்திரிகளில், பத்திரிக்கைகளில் செலவிட்டேன்.

'அதோ! பேராசிரியர் போகிறார்!' என மாணவர்கள் ஆச்சரியத்துடன் கூறுவது என் காதில் விழுகிறது. பிரபலமான டாக்டர் என மற்றவர்கள் என்னைப்பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் எல்லாம் அர்த்தமற்றவைகளாகி விட்டன. என் இதயத்தில் கவிழ்ந்துள்ள சோகம் அகற்ற முடியாதது. ஆற்ற முடியாத இரணத்தை சுமந்து திரியும் பிணியாளனைப் போல, உடைந்த இதயத்தைச் சுமந்துகொண்டு நான் ஒவ்வொரு நாளாகக் கழித்துக் கொண்டிருக்கிறேன்.

இலக்கியத்தில் படித்த சோகத்தைப் பற்றி, நாடகத்தில் பார்த்த சோகத்தைப் பற்றி, நீ கூறுகிறாய். ஆனால் சோகத்தை வாழ்வில் அனுபவித்தவன் நான்!"

டாக்டர் பொன்னையா முடித்தார்.

நீதிபதி சந்தானம் அடிவானத்தில் சூழ்ந்துள்ள இருளைப் பார்த்தபடி இருந்தார். டாக்டர் பொன்னையாவின் சோகக்கதை உருக்கமானதாயிருந்தது.

உன்னுடைய வாழ்வு சோகமயமானது தான். காதலித்தவளை அடைய முடியாமல், சாவின் கரத்தில் கடைசியாக அவளைக் காண்பது பொறுக்க முடியாத சோகம். ஆனால்..."

"ஆனால், என்ன?" பொன்னையா கேட்டார்.

"அந்த சோகத்தில் ஒரு உயர்வு, ஒரு பெருந்தன்மை இருந்தது!"

பொன்னையா எழுந்தார். "மறுபடியும் இலக்கியத்தில் படித்ததைப்பற்றி நீ சொல்கிறாய்!"

சந்தானம் எழுந்து நடந்தார். "இல்லை. என் வாழ்வில் நடந்ததைச் சொன்னால், உன்னைப் பற்றி நீ சமாதானமடைந்து கொள்ளலாம்.

"உன்னுடைய வாழ்விலும் காதல் குறுக்கிட்டதா?"

"ஆமாம்' வா, போகலாம்! இந்தக் குளிர்காற்று எனக்கு ஒத்துக்கொள்வதில்லை. வீட்டிற்குப் போனதும் சொல்கிறேன். சிதறிக்கிடக்கும் நினைவுகளைச் சேர்க்க சிறிது அவகாசமுமிருக்கும்." ○

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேடிக்கையாச் சிலபல மொழிகிறான். "மடந்தையே! நீ கடற்கரையின் கண் வாழுகின்ற ஒரு ஆரணங்கோ? இங்கேயே குடியிருப்பை ஏற்படுத்திக் கொண்டாயோ? பெண்ணே! நீ யார் என்றுதான் சொல்லேன்? பிறகு நான் போய்விடுகிறேன்!' என்று இறைஞ்சிக் கேட்கிறான் அவள் காலடியில் விழுந்து பார்க்கிறான். தலைவி தலைவனின் செயல்களுக்கு மிகவும இரங்கி, அவன்பால் அன்பு காட்ட எண்ணி புன்முறுவல் செய்கிறாள். அதே நிலையில் அவன் செய்த அடாத செயல்கள் அவளது நினைவுக்கு வருகின்றன- அதன் காரணமாக அவள் கண்களிலே கண்ணீர் பொங்குகிறது. அன்பும் அச்சமும் கலந்த குறிப்போடு தலைவி காட்சி அளிக்கிறாள். தலைவன் தலைவியின் புன்முறுவல் கண்டு மகிழ்ந்து, அவள், தன்னை மன்னித்து ஏற்றுக் கொண்டு விட்டாள் என்று கருதி அவளை நெருங்குகிறான். தலைவி இருகை நீட்டி வரவேற்கிறாள். தலைவன் தலைவியை அணைத்து முத்தமிடுகிறான். இருவரது அன்புக் கண்ணீர்த் துளிகள் ஒன்றோடொன்று கலக்கின்றன!

இது நற்றிணை **155** ஆம் செய்யுளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்ட காதற்காட்சியாகும். இந்தச் செய்யுள் நெய்தல் திணையைச் சேர்த்த தலைவி உடன்பட்டு வராத ஊடலின்போது தலைவன் சொல்லுவது என்னும் பிரிவைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் பராயனார் என்ற புலவராவார். இவர் நெய்தல் திணையைப் பற்றிச் சுவைபடப் பாடக் கூடியவர் என்று தெரியவருகிறது. இவரைப் பற்றி வேறு யாதும் தெளிவாகத் தெரியவில்லை.

எள்ளிழை மகளிரோடு
　　ஓரையும் ஆடாய்
வள்ளிதழ் நெய்தல்
　　தொடலையும் புனையாய்
விரிபூங் கானல்
　　ஒருசிறை நின்றோய்
யாரை யோநின்
　　தொழுதனம் வினவுதும்
கண்டோர் தண்டா
　　நலத்தை தொண்டிரைப்
பெருங்கடல் பரப்பின்
　　அமர்ந்துறை அணங்கோ
இருங்கழி மருங்கு
　　நிலைபெற் றனையோ
சொல்லினி மடந்தை
　　என்றனென் அதனெதிர்
முள்ளெயிற்று
　　முறுவலும் திறந்தன
பல்லிதழ் உண்கணும்
　　பரந்தவால், பனியே!

(நற்றிணை-155)

[பொழிப்புரை : ஒளிவீசும் அணிகலன்களையுடைய ஆய மகளிருடன் கூடிப் பாவையைக் கொண்டு விளை விளையாட்டையும் ஆடாது, பெரிய இதழையுடைய நெய்தல் மலர்மாலையையும் அணியாது, விரிந்த பூவையுடைய கடலின் அருகேயுள்ள சோலையின் கண்ணே ஒரு பக்கத்தில் நின்று கொண்டிருக்கின்ற பெண்ணே, நோக்கினோராலே கெடாத நலத்தினையுடையவளே, மடந்தையே, உன்னைப் பணிவாக வணங்கி வினவுகிறேன், "தெளிந்த அலையையுடைய பெரிய கடற் பரப்பின்கண்விரும்பி வாழ்கின்ற ஆரணங்கோ, கரிய உப்பங்கழி அருகிலுள்ள இந்த இடத்தில் நிலைமை கொண்டு உறைகின்ற ஒரு மாதோ வேறு யாவளோ இப்பொழுது சொல்லுவாயாக!" என்றுகூறினேம்; அப்படிக் கூறுதலும் அதற்கு விடையாக முன்போன்ற கூரிய பற்களினின்றும் புன்முறுவல் உண்டாயிற்று ஈரிமைகளைக் கொண்ட மை பூசப்பட்ட கண்களும் கண்ணீர்த் துளிகளைச் சிந்தின; ஆகையாலே நான் முன்பு முயங்குய இவளே இப்பொழுதும் ஆம் முயங்கற் குறிப்புடையள் ஆகிறாள்!

ஓசை-பஞ்சாய்க் கோரையாலே பாவைசெய்து வைத்து-விளையாட்டு ஆடுவது; வெள்ளிதழ்-பெரிய இதழ்; தொடலை-மாலை; கண்டோர் தண்டா நலன் - பார்ப்போராலே கெடாத நலம்: கண்ணெச்சில் (திருட்டிதோடம்)]

* * *

தலைவன் எவ்வளவு பெருங்குற்றம் செய்தாலும், அக்குற்றத்திற்காக அவன் வருந்துவானேயானால், அவனை மன்னித்து, அவன்பால் இரக்கங் காட்டி, அவனை ஏற்று அணைத்துக்கொண்டு, இல்லற வாழ்வை இனிது நடத்துதல் தலையாயத் தலைவிக்கு அழகாகும் தன்மை யாகும் என்பது இச்செய்யுளில் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. மன்னித்து ஏற்றுக்கொள்ளும் பண்பாடு பெண்ணினத்திடம் தமிழகத்தில் சிறந்து விளங்கியமை இதன் மூலம் அறியப்படும்.

தலைவி வேறு யாரோ என்று சொல்லி விடுவாளேயானால், தான் அகன்று விடத் தயாராக இருப்பவன் போல் தலைவன் பாசாங்கு மொழி பகர்வது நயப்பாடு நிறைந்ததாகும்.

பஞ்சாய்க் கோரையைக் கொண்டு பதுமை செய்து விளையாடுதல், நெய்தல், மலரை மாலையாகத் தொடுத்து அணிந்து கொள்ளுதல் போன்ற பழக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

தலைவி நகையும்; அழுகையும் தோன்றக் காட்சியளிப்பது பெண்ணினத்தின் இரக்கப் பண்பைச் சுட்டிக் காட்டுவதாகும். தலைவன் பரத்தையிடம் பிரிந்ததை எண்ணும்போது அவளுக்கு அழுகையும், தலைவனோடு சேரவேண்டும் என்று விரும்பும்போது அவளுக்குப் புன் சிரிப்பும் தோன்றுகின்றன. தலைவி இறுதியாகத் தலைமகனுக்கு எப்படியோ உவகையை ஊட்டுகிறாள்! தலைவன் தேறுதல் பெறுகிறான்! ○

இரண்டாவது திட்டத்தில் முதற்கோணல்!

——(0)——

1956–57 ஆண்டுபற்றிய அரசாங்க அறிக்கை தரும் விவரங்கள்

——(0)——

உணவு, மின்சாரம், நிலக்கரி இவைகளில் எதிர்பார்த்த அளவுகள் கிடைக்கவில்லை.

——(0)——

"ஐந்தாண்டுத் திட்டம்" என்பது இந்திய அரசாங்கத்தின் மூல மந்திரமாகி விட்டது. இந்திய துணைக்கண்டத்தின் பொருளாதார வலிவனைத்தும், ஐந்தாண்டுத் திட்டத்துடன் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது.

"ஐந்தாண்டுத் திட்டம் எப்படியும் நிறைவேறியாக வேண்டும்!" என்று காங்கிரசுத் தலைவர்கள் கண்டிப்பாகத் தெரிவிக்கிறார்கள்.

நாட்டிலுள்ள நாலாவிதக் குறைபாடுகளுக்கும் ஐந்தாண்டுத் திட்டம் பரிகாரமாகக் காட்டப்படுகிறது, உணவு நிலைமை, பற்றாக்குறை, இல்லாமை போதாமை,பஞ்சம் பசி,ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம் எதையெடுத்தாலும், எல்லாவற்றுக்கும் சர்வரோக நிவாரணியாக ஐந்தாண்டுத் திட்டம் கூறப்படுகிறது.

திட்டத்தின் கால அளவை நீடிக்க யோசனை சொல்லப்பட்டபொழுது, "ஐயோ! அது கூடாது! நாட்டில் ஏழ்மையில், பஞ்சத்தில் வாடுபவர்களை ஏழாண்டுகளுக்கு எட்டாண்டுகளுக்குப் பொறுத்துக் கொள்ளச் சொல்கிறீர்களா?" என்று கனம் சுப்பிரமணியம் போன்றவர்கள் கடுங்கோபத்துடன் கேட்டார்கள். அவர்கள் வாக்குப்படி, ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறினால் போதும் நாட்டின் குறைபாடுகளெல்லாம் நீங்கி விடும் என்பதாகும் அத்தகைய அசாதாரணமான நம்பிக்கையை மக்களிடம் உண்டாக்க காங்கிரசு மந்திரிகள் முயலுகிறார்கள்.

திட்டம் அவர்களுக்கு ஒருவித தெய்வீக சக்தியாகி விட்டது. தங்கள் இஷ்ட தேவதையைத் திருப்தி படுத்த காடாள்வோர் பலிகள் பல கொடுக்க முன் வருவதுபோல, தங்கள் திட்டத்துக்காக எந்த விதமான பலியையும் தர இந்த நாடாள்வோர் தயாராக உள்ளனர். திட்டத்தின் பெயரால் வரிகள் போடப்படுகின்றன, ஏழைகளின் துயரம் அதிகமாக்கப்படுகிறது. திட்டத்திற்காக, பற்றாக்குறை நிதித் திட்டங்கள் போடப்படுகின்றன. பொருளாதாரச் சீர்கேடுவரும் வகையில் புது நோட்டுகள் அடிக்கப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை மட்டும் முன்னால் வைத்து, மற்றெல்லாம் அதற்காகத் "தியாகம்" செய்யப்படுகின்றன. மக்களுக்காகத் திட்டம் போடப்படுவதாகக் கூறினார்கள். இப்பொழுது திட்டத்திற்காக மக்கள் விரட்டப்படுகின்றனர். திட்டக் கமிஷன் சொல்வது வேத வாக்காகிவிட்டது. திட்டத்தை நடத்திவைக்க, 'பரந்த உத்தியோக சாம்ராஜ்யம்' திரட்டப்பட்டுள்ளது. வரிப்பணம் கோடிக்கணக்கில் கொட்டியளக்கப்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956 மத்தியில் ஆரம்பித்து, 1961 மத்தியில் போய் முடிவதாகும். இதில் முதல் ஆண்டாகிய 1956-57 முடிந்து விட்டது. இந்த ஒரு ஆண்டில் இவர்கள் போட்ட திட்டங்கள் எந்த அளவு நிறைவேறியுள்ளன என்று கவனிக்கவும்.

திட்டந்தின்படி 1956-57ல் 25லட்சம் டன் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தியாகி யிருக்கவேண்டும். ஆனால் அரசாங்கக் கணக்குப்படியே அந்தவகையில் 1956-57ல் 14லட்சம் டன் உணவுப் பொருள்கள் தாம் உற்பத்தியாகியுள்ளன.

திட்டத்தில் போட்டது, திட்டத்தின்படி எதிர்பார்த்தது, திட்டங்கள் சரிவர நிறைவேறியிருந்தால் கிடைத்திருக்க வேண்டிய பலன் 25 லட்சம் டன் உணவுப் பொருள்கள். ஆனால் உண்மையில் கிடைத்திருப்பதோ 14 லட்சம் டன்கள்! மதிப்பிட்டதில் 11 லட்சம் டன்கள் குறைந்துவிட்டன. ஐந்தாண்டுத்திட்டத்தில் மிக முக்கியமான அடிப்படை நோக்கம், உணவுப் பொருள்களின் பற்றாக்குறையை நீக்குவதாகும். ஆனால் உணவு உற்பத்திக்குப் போடப்பட்ட திட்டம் சரியாக நிறைவேறவில்லை. எதிர்ப்பார்த்ததில் 100க்கு 56 பங்குதான் நிறைவேற்றப்பட்டது, 44 பங்கு பயனில்லை!

உணவு உற்பத்தியை அதிகரிக்க, ஜப்பானிய முறையைக் கையாண்டால் பலனளிக்கும் என்று அரசாங்கம் கருதியது. அதற்காக ஏராளமாக விளம்பரங்களும், பிரசாரங்களும், மாதிரிப்பண்ணைகளும், உதவிகளும் உண்டாக்கப்பட்டன. ஆனால் போட்ட திட்டத்துக்குக் குறைவாகவே அரசாங்கத்தால் நிறைவேற்ற முடிந்திருக்கிறது.

1956-57ல் 20லட்சம் ஏக்கர்களில் ஜப்பானிய முறையில் சாகுபடிச் செய்வதெனத் திட்டமிட்டிருந்தார்கள் ஆனால் அதற்கு மாறாக 14½ லட்சம் ஏக்கர்கள்தாம் ஜப்பானிய முறையில் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டன.

நீர்ப்பாசனத் திட்டங்களுடன் மின்சாரத் திட்டத்தையும் இணைத்து அரசாங்கம் பல திட்டங்களைப் போட்டிருந்தது. வடக்கில் போடப்பட்ட பெரும் அணைக்கட்டுகள், நீரைத் தேக்கி, அதிலிருந்து மின்சாரத்தை உண்டாக்குவதையும் திட்டத்தில் முக்கிய பகுதியாக வைத்திருந்தார்கள். தொழில் வளத்திற்கு மின்சாரம் மிகமுக்கியமானதால், மின்சார வசதிகளை அதிகரிக்க திட்டத்தில் இடம் தரப்பட்டிருந்தது, ஆனால் திட்டக் கமிஷன் எதிர்பார்த்தபடி, மின்சாரம் உற்பத்தி செய்யப்படவில்லை.

1956-57ல் 3,08,500 கிலோவாட் மின்சாரம் உற்பத்திசெய்ய வேண்டுமென்று ஐந்தாண்டு திட்டக்குழுவினர் வகுத்திருந்தனர். அந்த ஆண்டில் 2,60,000 கிலோவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்யப்பட்டது.

எதிர்பார்த்த அளவு மின்சாரம் உற்பத்தி ஆகாததால் பல இடையூறுகள் உண்டாகியுள்ளன. மின்சாரம் கிடைக்குமென நினைத்து பல திட்ட வேலைகள் செய்யப்பட்டன. ஆனால் மின்சாரம் வராததால் அவை தடைப்பட்டு நிற்கின்றன.

உதாரணமாக குழாய்க் கிணறுகள் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிக்கலாமென திட்டமிட்டார்கள். அதன் படி ஏராளமான குழாய்க் கிணறுகளுக்குப் பணம் தரப்பட்டது, பல கிணறுகள் தோண்டப்பட்டும் இருக்கின்றன. இன்னும் சில மாதங்களுக்குள் குழாய்க் கிணறுகளின்எண்ணிக்கை 3500க்கு மேல் போகும் என்று கூறப்படுகிறது. ஆனால் இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால், கிணறுகள் தோண்டப்பட்ட பல இடங்களில் மின்சாரம் இல்லையாம். மின்சாரம் வருமென எதிர்பார்த்து, குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு, பேசாமல் இருக்கின்றன. மின்சாரம் இன்னும் அங்கு வரவில்லை. மின்சாரம் வந்தால்தான், போடப்பட்ட அந்த கிணறுகளுக்குப் பலன் உண்டு. பஞ்சாப் மாநிலத்திலும் பீகார் மாநிலத்திலும் பல குழாய்க்கிணறுகள் வேலை செய்யாமல் இருக்கின்றன, மின்சாரம் இல்லாத காரணத்தால்!

மின்சாரத்துக்கு அடுத்தபடியாக, தொழில்வளத்துக்கு முக்கியமானது நிலக்கரி. இந்தியாவிலுள்ள தொழிற் துறைகள் பல நிலக்கரியால் இயங்குகின்றன. நிலக்கரி வெட்டியெடுப்பதிலும், திட்டக்குழுவினர் எதிர்பார்த்த அளவுகள் நிறைவேற்றப்படவில்லை.

1956-57ல் 20 லட்சம் டன் அதிகமான நிலக்கரி வெட்டியெடுப்பதென திட்டமிடப்பட்டது. ஆனால் 12லட்சம் டன்அளவுதான் நிறைவேற்றப்பட்டது.

திட்டத்தில் போட்ட அளவுகள், முக்கிய மூன்று துறைகளில் அதாவது உணவு, மின்சாரம், நிலக்கரி இவைகளில் நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டே இப்படியிருக்கிறது. முதலிலேயே கோணல் ஆரம்பமாகிறது!

1956-57ல் நிறைவேற்றப்பட வேண்டுமென குறிக்கப்பட்ட சில திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமலும் ஆரம்பித்தாலும் குறித்த காலத்தில் முடிக்கப்படாமலும் குறித்த பலன்கள் கிடைக்காமலும் இருக்கின்றன. 1956-57ல் 830 கோடி ரூபாய்களுக்கான திட்டங்கள் போடப்பட்டன. ஆனால் அவற்றில் 761 கோடி ரூபாய் அளவுள்ள திட்டங்கள்தான் பலன் தரும்வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முக்கியமாக கல்வி, சுகாதாரம், வீடு கட்டுவது ஆகியவைகளுக்காக போடப்பட்ட 20 கோடி ரூபாய் அளவுள்ள திட்டங்கள் நிறைவேற்றப் படவில்லை. போக்கு வரத்து சாதனங்களுக்காகப் போடப்பட்ட 14 கோடி ரூபாய் அளவுள்ள திட்டங்கள் உருப்பெற வில்லை. விவசாய பொது நலத்துக்கான 15 கோடி ரூபாய் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. சுரங்கத் தொழிலுக்கும் பொதுத் தொழில் துறைக்கும் போடப்பட்ட 10 கோடி ரூபாய் திட்டங்கள் செய்யப்படவில்லை. இவ்வாறு திட்டங்கள் போடப்பட்டும், நாட்டுக்கு உறுதுணையான பல திட்டங்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் ஆரம்பிக்கப்படாமலும் நிறைவேற்றப்படாமலும் போய்விட்டன.

ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தால், இந்தியாவின் பெரிய குறைபாடுகளெல்லாம் போய் விடுமென்று கூறுகிறார்கள். ஆனால் இவர்கள் போடுகின்ற திட்டங்கள், குறித்த காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட பண அளவுக்குள் முடிக்கப் பட்டு விடுமா என்ற சந்தேகம் எழுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு முடிந்து விட்டது. ஆனால் அந்த முதல் ஆண்டில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கவில்லை. போட்ட திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படவில்லை. முதற் கோணல்—எப்படிப் போகிறதென்று பார்க்கலாம்!

0

மோசடி ஆரம்பம்!

பணமோசடிகள் பற்பல வழக்குகள் வருகின்றன. அவ்வாறு பண மோசடி செய்பவர்களில் பலர்-100க்கு 90பேர் அதற்கு முன் மிக "நல்லவர்களாக, நாணயமுள்ளவர்களாக" மதிக்கப்பட்டவர்களாக இருந்திருப்பார்கள். சராசரி அளவை விடக் கூடுதலான உழைப்பும், நேரத்துக்குச் சரியாக வேலையை முடிக்கும் திறனும் உள்ளவர்களாக இருப்பார்கள். பல ஆண்டுகளாக நம்பிக்கையுடன் நடந்த அந்தப் பதவிகளுக்கு வந்தவர்களாயிருப்பார்கள். தெரிந்தவர்களெல்லாம் அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் தருவார்கள். ஆனால் திடீரென்று "பண மோசடி நடந்து விட்டது, அவர்தான் காரணம்! என்ற செய்தி வரும்பொழுது எல்லோரும் திடுக்கிடுவார்கள். அவரா மோசடி செய்தார்?" என்று நம்பாமல் கேட்பார்கள். பின்னால் கணக்குகள் கூட்டப்பட்டு, மோசடி உறுதியாக நிரூபிக்கப் பட்டபின்தான், அவரைப்பற்றி வைத்திருந்த "நல்ல" அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்வார்கள். அப்பொழுது கூட, "இவ்வளவு காலம் நல்லவனாக இருந்தவர், திடீரென்று இப்படி ஏன் மாறினார்?" என்றுதான் கேட்டுக்கொள்வார்கள்.

மற்றவர்கள் நினைப்பது போல குற்றம் செய்தவன் திடீரென்று ஒருநாள் பணமோசடியைச் செய்திருக்க மாட்டார். பல ஆண்டுகளாக அவர் செய்து வந்திருப்பார். யாரும் கவனிக்காமல் அது வரை இருந்திருப்பார்கள். மோசடி கண்டுபிடிக்கப்பட்ட நேரத்தில், அது "திடீரென்று" நடத்தப்பட்டதாகத் தோன்றும். பெருத்த மோசடிகளைக் கவனித்தால்கூட, இலட்சக்கணக்கில் ஒரு மோசடி நடந்தாலும், பல ஆண்டுகளாகச் சிறு சிறு மோசடிகள் நடந்து அந்த அளவுக்கு வளர்ந்திருக்கும். மோசடி முதலில் சிறு அளவில் ஆரம்பமாகும். பின்பு அது வளர்ந்து வரும்.

அமெரிக்காவில் ஒரு கம்பெனியில் கிளார்க்காக ஒருவர் இருந்தார். மிக நாணயமானவராக இருந்ததால் அவர் மூலமாக பலவகைகளுக்குப் பணம் செலுத்தப்பட்டது. கடிதங்களில் ஒட்டுவதற்காக தபால் தலைகளை அடிக்கடி அவர் வாங்கிவருவார். ஒரு நாள் வேண்டிய அளவு தபால் தலைகள் இல்லாததால், பாக்கிப் பணத்தை பையில் போட்டுத் திரும்பினார். அதை மறந்துவிட்டார். மறுநாள் பார்க்கும் பொழுதுதான் வைத்த பணம் ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் மற்றவர்கள் யாரும் கண்டுபிடிக்கவில்லை! அந்தப் பெரிய கமபெனியில் லட்சக்கணக்கில் பணம் புரளும் பொழுது அவரிடம் தரும் பணத்துக்கான சரியான கணக்குகளை யாரும் பார்க்கவில்லை. மற்றவர்கள் கவனிக்காததால், பணத்தை மறைப்பது சுலபமாக அவருக்குப்பட்டது. அதிலிருந்து சிறுகச் சிறுக பலவகைகளிலும் கூடுதலாகவே பணத்தைப் பெற்று, ஒருபகுதியை மறைக்க ஆரம்பித்தார். ஐந்தாறு ஆண்டுகள் அவர் அப்படிச் செய்து வந்தார். பின் ஒரு செலவில் கணக்கு ஆய்வாளர்களுக்கு (ஆடிட்டர்களுக்கு) சந்தேகம் ஏற்பட, எல்லாக் கணக்குகளையும் புரட்டிப்பார்க்க, மொத்தம் 2லட்சம் டாலர்களுக்குமேல் (அதாவது 6அல்லது 7லட்சம் ரூபாய்களுக்கு) மோசடி நடந்திருப்பதாகத் தெரிந்தது!

பல மோசடிகள் ஆரம்ப நிலையில் "மோசடியாக" ஆரம்பிப்பதில்லை. அவை "கடனாக" ஆரம்பிக்கும் அதாவது சிறு தொகை உடனடியாக வேண்டியிருப்பதால், வேலை பார்ப்பவர் கம்பெனிப் பணத்திலிருந்து "கடனாக" கொஞ்சம் எடுத்துக்கொள்வார். அப்பொழுது அவருடைய உண்மையான எண்ணம் என்னவென்றால், எடுத்த பணத்தைப் போட்டுவிட வேண்டுமென்பதுதான். ஆனால் அந்தக் "கடன்" வளர்ந்து கொண்டே போய் "மோசடியில்" முடியும்!

ஒரு கம்பெனியில் வேலை பார்த்தவர் மருந்து வாங்குவதற்காக சிறு தொகையை கம்பெனி பணத்திலிருந்து எடுத்துக் கொண்டார். அவர் அந்தப் பணத்தைத் திரும்பப் போடுவதற்குள், கம்பெனி கணக்கு ஆய்வாளர்கள் வந்து விட்டனர். பணத்தை எடுத்தவர் பதறிப்போய், தான் நண்பர்களிடம் கடன் வாங்கி அந்தத் தொகையை சரிக்கட்டி விட்டார். கணக்கு ஆய்வாளர்கள் பார்த்தார்கள், கணக்கெல்லாம் ஒழுங்காக இருந்தது, இருக்கவேண்டிய பாக்கிப் பணம் சரியாக இருந்தது.

பரிசோதனை முடிந்து, கணக்கு ஆய்வாளர்கள் போனதும், கம்பெனிப்பணத்தை எடுத்து தான் வாங்கிய கடனை அவர் அடைத்தார்.

இப்படியாகக் கம்பெனிப் பணத்தை எடுத்துக்கொள்வது, கணக்குப் பார்க்கும் சமயத்தில் கடன் வாங்கிப் போடுவது, பின் கணக்கு முடிந்ததும் பணத்தைத் திரும்ப எடுப்பது இப்படி அவர் செய்துவந்தார். ஆனால் "கடனாக" எடுக்கும் தொகை வரவர அதிகமாகி, பிறரிடம் வாங்கமுடியாத அளவு போய்விட்டது, மோசடி கண்டுபிடிக்கப்பட்டு அவர் தண்டிக்கப்பட்டார்.

அமெரிக்காவில் ஒரு கம்பெனியில் வேலைபார்ப்பவர், 350 டாலர் பணத்தைப் பாங்கில் போடப் போய்க் கொண்டிருந்தார். வழியில் அது காணமற் போய்விட்டது. பணம் காணமற்போனதைத் தெரிவித்தால் தன் வேலை போய்விடுமோ என்று பயந்த அவர், கம்பெனிக்குத் திரும்பிப் போய், புத்தகத்திலிருந்த கணக்குகளைக் கூட்டிக் குறைத்துச் சரிசெய்து வைத்தார். விரைவில் பணத்தைச் சேகரித்துக் கட்டிவிட்டு, கணக்குகளைப் பழையபடி சரியாக வைத்துவிடலாம் என்று நினைத்துதான் அவர் அப்படிச் செய்தார், ஆனால் அவர்செய்த "கணக்கு வேலைகளை" யாரும் கண்டுபிடிக்கவில்லை. அதற்குப் பின் வேண்டுமென்று பணத்தை எடுத்துக்கொண்டு, கணக்குகளை மாற்றி எழுதி வைக்க ஆரம்பித்தார். எட்டு ஆண்டுகள் அவர் "தப்புக் கணக்குகளைச்" செய்து வந்தார். கடைசியில் கண்டு பிடிக்கப்பட்டபொழுது, 67,000 டாலர்களை அவர் மோசடி செய்திருப்பதாகத் தெரிகிறது.

பணமோசடிகளைப் பற்றி ஆராய்ந்தால், ஏழைகள்தான் அவற்றைச் செய்கிறார்கள் என்று கூறிவிடமுடியாது. அமெரிக்காவில் பல கம்பெனிகளில் உயர்ந்தசம்பளம் வாங்கியவர்களே மோசடிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு கம்பெனியின் தலைவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 75 ஆயிரம் டாலர் சம்பளமாகத் தரப்பட்டது. இருந்தாலும் கம்பெனி பணத்திலிருந்து 2லட்சம் டாலர்கள் அவர் மோசடி செய்திருந்தார்!

மற்றொரு பிரமுகர் ஒரு பாங்கியின் தலைவராக இருந்தார். தர்ம சிந்தனையாளராகவும், சிறந்த கொடையாளியாகவும் அவர் விளங்கினார். மாதா கோயில்கள், தர்மப்பள்ளிகள், பொதுக்காரியங்கள் எல்லாவற்றுக்கும் அவர் ஏராளமாகத் தந்திருக்கிறார். கடைசியில் அவர் பாங்கிக்கணக்கைப் பார்த்தவர், பாங்கிப் பணத்தில் பல லட்சங்களை அவர் கையாடியிருப்பதாகத் தெரிவித்தார். போலீசிடம் புகார் கொடுத்தால், அந்த "நல்லவரை" எப்படிக்கைது செய்வது என்று அந்த ஊர்ப் போலீசு மறுத்து விட்டதாம். அவர் மோசடி செய்திருப்பார் என்று யாரும் நம்பவில்லை. ஊரைவிட்டு அவர் ஓடிப்போன பின்தான், கைது செய்யப்பட்டாராம்!

எவ்வளவு "நல்லவராக" "நாணயமானவராக" நடித்து மோசடி செய்தாலும் கடைசியில் மோசடி கண்டுபிடிக்கப்பட்டு விடுகிறது. கண்டு பிடிக்கப்பட்ட கடைசி மோசடியிலிருந்து ஆரம்பித்தால், முதலில் செய்த எல்லா மோசடிகளும் வெளி வந்துவிடும். ●

16வது நூற்றாண்டின் மத்தியில் ஜப்பானில், இதியோஷி என்ற மன்னர் ஆண்டு வந்தார். ஒரு சிறு நாட்டுக்கு மட்டும் அரசராக இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. பக்கத்து நாடுகளை ஆட்படுத்தி, பெரிய வல்லரசை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டானது. மன்னர் இதியொஷி என்பதற்குப் பதில் பேரரசர் இதியொஷி என்று தன்னாட்டில் அழைக்கும் படி செய்தார். பல மன்னர்களுக்கு மன்னராக விளங்க எடுத்துக் கொண்ட முதல் முயற்சி!

அடுத்த படி சீனா பக்கம் அவர் கவனம் சென்றது. தனக்கு அடிபணியுமாறு அச்சுறுத்தி, சீனாவுக்கு ஒரு கடுமையான தாக்கீதை பேரரசர் இதியோஷி அனுப்பினார், சீன நாடு பெரிய நாடு, அங்கு ஒரு பேரரசர் இருந்தார். அவரிடமிருந்து தூதுவன் ஒருவன் பதிலைக் கொண்டுவந்தான்.

தனது ஆணை பலித்து விட்டதாக நினைத்து இதியோஷி பேரரசர் மகிழ்ச்சியடைந்தார். ஒரு பெரிய வரவேற்பு தந்து, ஆடம்பரத்துடன் சீன நாட்டுத் தூதுவனை அவர் வரவேற்றார். சீன நாட்டுத் தூதுவன் மிக வணக்கத்துடன், தன்னிடமிருந்த நீண்ட காகிதச் சுருளை இதியோஷி முன் வைத்தான்.

பேரரசர் இதியோஷி மிக ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தார். "இதியோஷியை ஜப்பான் நாட்டு மன்னராக நியமித்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன்!" என்பதின் கீழ் சீன நாட்டுப் பேரரசரின் கையெழுத்து இருந்தது!

50 லட்சம் ரூபாயில் அரசாங்கக் கட்டிடம்!

—0—

"ஏழைகள் நாட்டில் தேவைதானா"

பம்பாயில் அரசாங்க அலுவலகமொன்றைக் கட்டி முடிக்க 50 லட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மற்றும் அவசியமான பல செலவுகள் இருக்கின்ற நேரத்தில், 50லட்ச ரூபாயில் கட்டிடத்தை ஒத்திபோடக்கூடாதா என எம். வி. தாண்டே பம்பாய் மேல்சபையில் பேசும்பொழுது கேட்டார்.

எம். வி. தாண்டே அவர்கள் பம்பாய் மேயராக இருப்பவர் பம்பாய் கார்ப்பரேஷனில் காங்கிரசின் பலம் குறைந்து, சமிதியின் உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். சமிதியின் சார்பில் தாண்டே அவர்கள் பம்பாய் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஐம்பதுலட்ச ரூபாயில் புதிய கட்டிடம் எழுப்புவதைக் கண்டித்துப் பேசும்பொழுது தாண்டே குறிப்பிட்டதாவது: "பம்பாய் நகரில் குறைந்தது பத்து லட்சம் பேர்களாவது வீடு இல்லாமல், பாதையோரங்களில் வசிக்கிறார்கள். ஆனால் அவர்களின் நிராதரவான தன்மையை அரசாங்கம் எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை. வீட்டு நெருக்கடி அதிகமாக இருக்கிறது. முக்கியமாக ஏழைகளுக்குக் குறைந்த அளவில் வீட்டு வசதிகள் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். ஒரு புதிய கட்டிடம் எழுப்ப அரசாங்கம் போடும் பணத்தில், ஏராளமான ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தர முடியும். ஐம்பது லட்ச ரூபாயில் திட்டமிடப்படும் கட்டிடம் சிறிதுகாலம் பொறுத்துக்கொள்ளலாம். இருக்கும் இடத்தை வைத்து அரசாங்கம் சமாளித்துக்கொள்ளலாம். முதலில் வீடற்றவர்களின் துயரைப் போக்க முயலவேண்டும்."

பம்பாயில் அரசாங்கம் கட்ட இருக்கும் கட்டிடம், "சச்சிவாலயா என்ற கட்டிடத்துடன் தொடர்ந்து இருக்குமாம்.

"அரசாங்கத்தின் போக்கை கண்டித்து மக்கள் போராட்டம் நடத்தினால், அதன் முன்னணியில் நின்று நான் போராடுவேன்." எனவும் பம்பாய் மேயர் அறிவித்துள்ளார்.

புதுப்புதுக் கட்டிடங்களை எழுப்புவது அரசாங்கத்திற்கு பெருமையாகப் படுகிறது. ஆனால் தற்பொழுது அவசியமில்லாத பல கட்டிடங்களில் போடப்படும் இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை, வேறு உடனடித் தேவையான பகுதிகளில் செலவிட்டால் நல்லது. பம்பாய் நகரத்தில் இருப்பது போன்றே ஒவ்வொரு பெரு நகரங்களிலும் வீடு இல்லாதவர்கள் தொகை இலட்சக்கணக்கில்; கோடிக்கணக்கில் இருக்கும். அவர்கள் பாதையோரங்களில் வாழ்க்கை நடத்துகிறார்கள். அடுத்தபடியாக சேரிகளில் வீட்டு சுகாதார வசதிகளின்றி பலர் வாழ்கின்றனர்.

உண்மையான அரசாங்கம் முதலில் அந்தக் களங்கத்தை மாற்றி அமைக்கவேண்டும். [illegible] லட்சம், ஒருகோடி என்று பெரிய கட்டிடங்களை வெறும் பெருமைக்காக அரசாங்கம் கட்டிவிட்டு பின்பு அவற்றை வைத்துக்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசிக்கிறது. வெளிநாட்டிலிருந்து வருபவர்களிடம் பெரிய கட்டிட வேலைகளைக் காட்டிப் பெருமைப் பட்டுக்கொள்ளலாம். ஆனால் பெரிய கட்டிடங்களைப் பார்ப்பதால், பாதையோரத்தில் வசிப்பவர்களின் குறைகளும், சேரி வாழ்வோர் துயரங்களும் தீர்ந்துவிடாது.

அரசாங்கம் ஒருபக்கத்தில் பெரும் கட்டிடங்களைக் கட்டி பெருமைப்படுகிறது, மறுபக்கம் சேரிவாழ்வோருக்கும் வீடற்றவர்களுக்கும் குடியிருப்பு வசதிகளைச் செய்ய பணமில்லையெனக் கையை விரிக்கிறது!

0

ஜூலை-7, ஞாயிறு

—(0)—

பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்!

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், 7—7—57 ஞாயிற்றுக்கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக்கொண்டு, அன்று அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள தோழர்கள் அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாட்டுடன், அமைதி குலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன் கூட்டியே அந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

1200 கோடி அதிக செலவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போடப்பட்ட திட்டம் 4800 கோடி ரூபாய்கள், இப்பொழுது அதுதான் 1200 கோடி ரூபாய் கூடுதலாகிவிட்டது. அதாவது திட்டக்குழுவினர் கணக்கிட்டதைவிட நான்கில் ஒரு பகுதி செலவு கூடுதலாகிறது.

முதலில் போடப்பட்ட 4800 கோடி ரூபாயை எப்படி சேர்ப்பது என்பது இந்திய அரசாங்கத்துக்குக் கடினமான காரியமாயிருக்கிறது. அந்தச் சமயத்தில் மேற்கொண்டு 1200கோடி ரூபாய்க்கு இந்த அரசாங்கம் என்ன வழி செய்யப் போகிறது என்று தெரியவில்லை.

இப்பொழுது போடப்பட்டுள்ள புது வரிகளால் ஆண்டு ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் புது வரிகள் கிடைக்கும். ஐந்து ஆண்டுகளிலும் 500 கோடி ரூபாய்கள் வரி உயர்வின் மூலம் அதிகம் கிடைக்கலாம். ஆனால் திட்டச் செலவோ 1200 கோடி ரூபாய் உயர்ந்துவிடுகிறது!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை 4800 கோடி ரூபாய்க்குப் போட்ட பொழுது அந்தப்பணத்தைக் கீழ்க்கண்டவாறு பெறுவது எனத் திட்டக்குழுவினர் எழுதிவைத்தனர்.

(1)	வரிகளின் மூலம்	800 கோடி
(2)	உள்நாட்டுக் கடன்களின் மூலம்	1200 கோடி
(3)	ரயில்வே, பிராவிடண்ட்பண்ட் மூலம்	400 கோடி
(4)	வெளிநாட்டு உதவி	800 கோடி
(5)	பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டம்	1200 கோடி
(6)	மற்றவகைகளில் உள்நாட்டிலிருந்து கூடுதலான வருமானம்.	400 கோடி
		4800 கோடி

இப்பொழுது திட்டச் செலவு 6000 கோடியாக உயர்ந்துவிட்டது, அதிகமான 1200 கோடி ரூபாயை எந்த வகையில் சேர்க்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.

ஒன்று வரியை உயர்த்தி, 1200 கோடி ரூபாய் அதிகமாக்க வேண்டும். இப்பொழுதுள்ள வரி உயர்வைவிட இரண்டு மடங்கு அதிகமான வரி பொது மக்களைத் தாக்கும்.

அல்லது அச்சுக்கூடமும் காகிதமும் இருக்கவே இருக்கின்றனவென்று நோட்டுகளை அச்சடித்து வழங்குவது, இவைகளில் எதைச் செய்தாலும் 4800லிருந்து 6000 கோடிக்கு உயர்ந்த திட்டம் 6000கோடியிலிருந்து 8000 கோடிக்கு உயர்ந்துவிடும். ஆனால்தான் "இவ்வளவு பெரும் செலவை நாடு தாங்காது" என்று பண்டிதநேரு தனது மந்திரிகளுக்கு அறிவிக்கிறார். இந்தப் பெருஞ் செலவை நாடு தாங்காது என்பது, நேருவுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் தெரிகிறது. நாடு தாங்காது என்று பண்டிதநேரு கூறுகிறாரேயொழிய, நாடு தாங்கக்கூடிய வகையில் என்ன செய்யப் போகிறோம் என்பதை கூறவில்லை.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண்: 556[illegible]